இயல் ஐந்து

பாசம் பற்றிய உவமைகள்

இயல் ஐந்து

பாசம் பற்றிய உவமைகள்

முன்னுரை

பாசம் என்பதற்கு, 'கட்டு' என்பது பொருள். தமிழில் 'கயிறு' எனவும் பொருள்படும். உயிரின் அறிவு, இச்சை, செயல்களை இயல்பாக நிகழாமல் தடை செய்து தளைத்து வைத்திருப்பதால் பாசம், 'தளை' எனவும் பெயர் பெறும். 'திருஞானசம்பந்தர் பாசத்தைப் 'பாசவேதனை' என்றும் அது உயிர்க்குத் 'தளை' என்றும் குறிப்பிடுகின்றார்[1]. கச்சியப்பமுனிவரும் பாசத்தைத் 'தளை' எனக் குறிக்கக் காணலாம்[2]. கட்டு, தளை என்ற சொற்களால் மட்டுமன்றி அறிவுக்குத் தடையாக இருக்கும் பாசத்தைத் தடை என்ற சொல்லாலும் குறிப்பர். இதனைச் சித்தியார்,

"சத்திதன் வடிவேது என்னில்
தடைஇலா ஞானம் ஆகும்"[3]

என்று கூறுகின்றது. மலம் என்ற சொல்லாலும் பாசம் குறிக்கப்பெறும். இது ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும். இம்மலங்கள் மூன்றாக இருப்பதால் இவை 'மும்மலம்' என்றும் 'திரிமலம்' என்றும் குறிப்பிடப்பெறுகின்றன. இதனை மெய்கண்டார்,

"மலம்மாயை தன்னொடு வல்வினை"[4]

என்று குறிப்பிடுகின்றார். இவற்றோடு உடல், கரணம், புவன, போகங்கள் முதலிய மாயையின் காரியங்களாகிய மாயேயத்தையும் மும்மலங்களையும் தொழிற்படுத்தி அவற்றின் வலிகெட உயிர்க்கு உதவும் மறைப்பாற்றலாகிய திரோதாயியையும் மலங்களாகக் கொண்டு மலங்களை ஐந்தெனவும் குறிப்பர். இவ்வைந்து மலங்கள் 'பஞ்சமலங்கள்' என்று குறிக்கப்பெறும். மணிவாசகப் பெருமான், 'மலங்கள் ஐந்து'[5] என்றும், திருமூலர் 'மாறாமலம் ஐந்து'[6] என்றும் குறிப்பிடுகின்றனர் இதனைச் சிவப்பிரகாசத்தின்,

"மோகம்மிக உயிர்கள் தொறும் உடனாய் நிற்கும்
மூலஆணவம் ஒன்று முயங்கி நின்று
பாசம்மிக உதவுதிரோ தாயி ஒன்று

பகுமாயை ஒன்று பாசக்கன்மம் ஒன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்று என்று
ஆகமலம் ஐந்தென்பர் ஐந்தும் மாறாது
அருள் என்பது அரிதென்பர் அறிந்துளோரே" [7]

என்னும் பாடலால் உணரலாம். இவ்வாறு குறிக்கப்பெறும் மலங்களை உரைகள் வாயிலாகச் சாத்திர நூல்கள் எவ்வாறு விளக்குகின்றன என்பதை ஆய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

மும்மலங்களும் அவை காரியப்படும் முறையும்

மும்மலங்களும் என்றும் உள்ளவை ; அவற்றுள் ஆணவமலம் உயிருடன் அநாதி தொடர்புடையது. ஏனைய இரண்டும் இடையில் உயிரைப் பற்றி இடையிலேயே உயிரிடமிருந்து நீங்கும் இயல்புடையன. இவை பதியினாலேயே காரியப்படுகின்றன. இக்கருத்தைச் சிவஞானபோதம்,

"நெல்லிற்கு உமியும் நிகழ்செம்பினில் களிம்பும்
சொல்லின் புதிதன்று தொன்மையே வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலால் பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத் தாம்" [8]

என்ற வெண்பாவால் விளக்குகின்றது. இப்பாடலில் நெல்லிடத்து உமியும் செம்பிடத்துக் களிம்பும், நெல்லும் செம்பும் உளவாயினன்றே உள்ளன. இடையே வந்தன அல்ல. அதுபோல ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் அநாதியேயுள்ளன என்று மலங்களின் அநாதித்தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறுள்ள மலங்கள் தத்தம் காரியங்களைச் செய்வது பதியினாலேயே என்பதற்கு முன்பேயுள்ள தாமரை மலரை அலரவும் கூம்பவும் செய்கின்ற கதிரவன் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது.

மும்மலங்களும் அநாதியானவை என்பதை,

"நெல்லின்முளை தவிடு உமிபோல் அனாதியாக
நிறுத்திடுவர் இதுசைவம் நிகழ்த்துமாறே" [9]

என்று சிவப்பிரகாசமும்,

"நெல்லுக்கு உமிதவிடு நீடுசெம்பில் காளிதமும்

தொல்லைக் கடல் தோன்றத் தோன்றுவரும் "[10]

என்று போற்றிப்பஃறொடையும் குறிக்கக் காணலாம்.

மும்மலங்களும் அநாதியானவை என்பதற்குக் கடலும் கடலில் கலந்துள்ள நீரும், நீருடன் கலந்துள்ள உப்பும் உவமைகளாகக் கூறப்படுகின்றன. இக்கருத்தை

"தண்கடல்நீர் உப்புப் போல்"[11]

என்று சிவஞான போதமும்,

"வாரிநீர் லவணம் போலும்"[12]

என்று சித்தியாரும்,

"கடலில் உப்பு"[13]

என்று போற்றிப்பஃறொடையும் விளக்குகின்றன.

சத்தாகிய சிவம் என்று உள்ளதோ அப்பொழுதே சதசத்தாகிய உயிர்களும் உள்ளன. அன்றே உயிர்களை அசத்தாகிய பாசம் பற்றி நிற்கிறது. நீருக்கு இடம் கொடுக்கும் ஆகாயமும், ஆகாயத்தில் உள்ள நீரும், நீரில் உள்ள உப்பும் போலப் பதியும் உயிரும் பாசமும் தொடக்கமில் காலந்தொட்டு உள்ளன. கடல், நீர், உப்பு ஆகியவற்றுள் உப்பு ஆகாயத்தைப் பற்றாமல் நீரைப்பற்றி நிற்கும். உப்பு ஆகாயத்தைப் பற்றாமைக்குக் காரணம் ஆகாயம் சூக்குமமாய் இருப்பதனாலேயே ஆகும். உப்பு நீரைப் பற்றுவதற்குக் காரணம் நீர் தூலமாய் இருப்பதனாலேயேயாகும். அதுபோலவே பதி, பசு, பாசம் மூன்றும் அனாதியாய் ஓரிடத்தில் இருந்தாலும் பாசம் சூக்குமம் ஆகிய பதியைப் பற்றாது தூலம் ஆகிய பசுவைப் பற்றி நிற்கும். அவ்வாறு பற்றுவதற்குக் காரணம் பசுவின் தூலத்தன்மையே ஆகும். இங்கு பதிக்குக் கடலும் உயிருக்கு நீரும் பாசத்திற்கு உப்பும் உவமைகளாகியுள்ளன. உப்பு, நீரைப் பற்றுவது என்பது பாசம் என்று கூறப்படும் மும்மலங்கள் உயிரைப் பற்றியதற்கு உவமையாகும்.

இவ்வாறு ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் உயிரினது உண்மை வடிவினை மறைத்து அதற்கு மயக்கத்தைத் தரும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

அரிசிக்கு முளை, தவிடு, உமிப் போல் என்றது மும்மலங்கள் உயிரைப் பந்தப்படுத்துதற்கும் பந்தத்திற்குக் காரணம் ஆதற்கும் உவமையாகும். இம் முளை, தவிடு, உமிகளில் முளை என்பது கன்மத்திற்கும் தவிடு மாயாமலத்திற்கும் உமி ஆணவ மலத்திற்கும் அரிசி உயிர்க்கும் உவமைகளாகும்.

நெல்லிடத்து முளை, தவிடு, உமி ஆகியவை அதனுடனேயே தோன்றினாலும் அவை நீங்கியபின் அரிசி நிலைபெறுதலைப் போல மும்மலம் நீங்கப் பெற்ற பின் உயிரும் நிலைபெறும். தவிடுமிகள் அரிசியினின்று முற்றிலும் நீங்கி அரிசி நெல்லானதில்லை. அதுபோல மும்மலங்களும் உயிரைவிட்டு நீங்கிய பின் அவை உயிரைப் பற்றுவதில்லை என்பதைச் சித்தியாரின்,

"நெல்லினுக்கு தவிடுஉமிகள் அநாதி யாயே

நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்

சொல்லியிடில் துகள்அற்ற அரிசியின்பால் இல்லை

தொக்குஇருந்து மற்றொருநெல் தோன்றிடாவாம்

மெல்லஇவை விடும்அறவே இவைபோல அணுவை

மேவும்மலம் உடல்கன்மம் அநாதிவிட்டே நீங்கும்" [14]

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

மும்மலங்கள் உயிரின் உண்மைத்தன்மையை மறைத்து உயிருக்கு மயக்கத்தைத் தருவதைச் சித்தியார்,

"மும்மலம் நெல்லினுக்கு

முளைபொடு தவிடு உமிபோல்

மம்மர் செய்து அணுவின் உண்மை

வடிவினை மறைத்து நின்று

பொய்ம்மைசெய் போகபந்த

போத் திருத் துவங்கள் பண்ணும்" [15]

எனவரும் பாடலடிகளின் வழியாக உணர்த்துவதைக் காணலாம்.

அதாவது முளை நெல்லுக்கு முளைத்தல் ஆற்றலைத் தோற்றுவிப்பது போல் கன்மம் பொய்ம்மையைச் செய்கின்ற இன்பதுன்பங்களைத் தோற்றுவிக்கும் என்றும், தவிடு, நெல் முளைப்பதற்கு அனுகூலமாக நிற்பது போல மாயாமலம் அந்த இன்பதுன்பங்கள் தோன்றுவதற்கு அனுகூலமாகத் தனு, கரண, புவன போகம் ஆகியவற்றைத் தோற்றுவிக்கும் என்றும், உமி அந்த முளை தோன்றுவதற்கு நித்தமாய் நெல்லைப் பற்றி நிற்பது போல ஆணவமலம் அந்த இன்பதுன்பங்களை உயிர் அனுபவிக்குமாறு உயிரைப் பற்றி நிற்கும் என்றும் கூறுகிறது.

இவ்வாறு முப்பொருள்களும் அநாதியானவை என்றும் முப்பொருள்களுள் ஒன்றாகிய பாசம் மூவகையாகும் என்றும் அவை இறைவனாலேயே காரியப்படுகின்றன என்றும் சாத்திரங்கள் உவமை வாயிலாக விளக்கியுள்ளன.

ஆணவமலம்

இறைவன் பேரருள் உடையவன்; உயிர்களுக்கு இரக்கப்பட்டு நன்மை மட்டுமே செய்பவன். இறைவனையும் உயிர்களையும் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் அறிவற்ற சடங்களேயாகும். எனவே உயிர்க்கு அறியாமையைச் செய்யும் பொருள்களும் சடமாக இருத்தல் வேண்டும். அறிவாக இருக்கின்ற உயிர்க்கு அறியாமையைச் செய்கின்ற மலத்தைச் சைவசித்தாந்தம் 'ஆணவமலம்' என்று குறிப்பிடுகின்றது. இதுவே உயிர்க்கு முதல் தளையாக இருப்பதால் 'மூலஆணவம்'[16] என்றும் சிவப்பிரகாசம் குறிப்பிடுகின்றது. ஆணவமலம் ஒன்றாய், அநாதியாய், உயிர்கள் பக்குவம் பெற்றபொழுது விட்டு நீங்கும் தன்மையதாய் எண்ணிறந்த ஆற்றல்களை உடையதாய், உயிரின் அறிவை மறைப்பதாய், அறியாமையைச் செய்வதாய், என்றுமொன்றாய் நிலைபெற்றிருக்கும் மூலமாய் விளங்குவது எனச் சிவஞானசித்தியாரும் சிவப்பிரகாசமும் இலக்கணம் வகுத்துள்ளன. இதனை,

"ஒன்றதாய் அநேக சக்தி
உடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை
நிகழ்த்திச்செம் பினிற்களிம்பு ஏய்ந்து
என்றும்அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே" [17]

என்றும்,

"ஏகமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருள்ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பின்உறு களிம்பு ஏய்ந்து நித்த
மூலமல மாய்அறிவு முழுதினையும் மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதாயி சக்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்" [18]

என்றும் வரும் பாடல்களால் அறியலாம்.

ஆணவமலம் உயிர்களுக்கு இடையே வந்தது அன்று உயிர் என்று உண்டோ அன்றே அதனை ஆணவம் பற்றியுள்ளது. உயிருடன் ஆணவமும் தோன்றி நிற்பதால் இது 'சகசமலம்' எனவும் படும். பொதுவாக மலம் என்றாலே அது ஆணவமலத்தையே குறிக்கும்.

"தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்" [19]

என்று மெய்கண்டார் ஆணவமலத்தை மலம் என்ற சொல்லாலேயே குறிப்பிடுவதைக் காணலாம்.

ஆணவமலத்தின் இயல்புகள்

ஆணவமலம் தன்னியல்பு, பொதுவியல்பு என இரண்டு இயல்புகளை உடையது. உயிர்களின் அறிவை அடியோடு மறைத்து அறியாமை வடிவாகச் செய்வதே ஆணவமலத்தின் தன்னியல்பு ஆகும். மாயை, கன்மங்களின் சார்பு

உண்டான பொழுது அவை உயிரின் அறிவை விளக்குவித்துப் பொருள்களை உள்ளவாறு உணரவொட்டாது உயர்ந்த பொருளை இழிந்த பொருளாகவும் இழிந்த பொருளை உயர்ந்த பொருளாகவும் மயக்கி உணரச் செய்வது ஆணவமலத்தின் பொதுவியல்பாகும்.

ஆணவமலம் அநாதி

அநாதி என்பது என்றும் உள்பொருளாகும். அவ்வகையில் ஆணவமலமும் அநாதியாகும். அநாதியாக உயிர் என்று உள்ளதோ அன்றே ஆணவமும் அதனைப் பற்றியுள்ளது. உயிருடன் கூடிய ஆணவத்தினை,

> ".... .... வியாத
> வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்றாம் காட்டம்போல்
> தன்னைமலம் அன்று அணைதல்தான்" [20]

என்று சிவஞானபோதம் குறிப்பிடுகின்றது. கேடில்லாத உயிரை ஆணவம் தன்னுள் மறைத்து வைத்திருப்பதற்கு விறகானது தன்னிடத்துக் கொண்டுள்ள நெருப்பும் தானும் ஒன்றேயாய் இருப்பது உவமையாகும்.

ஆணவமலம் உயிரை அநாதியே பற்றிநிற்கும் தன்மையினை,

> "...........செம்பினிற் களிம்பு ஏய்ந்து" [21]

என்று சித்தியாரும்,

> "......செம்பின் உறு களிம்பு ஏய்ந்து "[22]

என்று சிவப்பிரகாசமும் குறிப்பிடுகின்றன. செம்பில் களிம்பு என்பது செம்புடனாயது போல் உயிரில் ஆணவம் என்பது உயிருடனாயது என்று உயிரின் ஆணவமலப் பிணிப்பை விளக்குகின்றன.

ஆணவத்தின் பெயர்களும் காரியங்களும்

ஆணவமானது பல்வேறு ஆற்றல்களால் பல பெயர்களைப் பெறுகிறது. உயிர் எங்கும் சென்று எதனையும் அறிதற்கு உரியதாயினும் ஆணவத்தால் உடலுடன் கட்டுண்டு எதனையும் அறிவிக்க அறிந்தும் அறிந்ததை மறந்தும் இருக்கும்படியாக ஆணவம் உயிர்க்கு அணுத்தன்மையை அதாவது உயிர்க்குச் சிறுமையைச் செய்தலின் ஆணவம் என்றும், உயிரைப் பிணித்து நிற்றலின்,

'பசுத்துவம்' என்றும், உயிரது அறிவை மறைத்து நிற்பதால் 'பசுநீகாரம்' என்றும், உயிர் உடலோடு பொருந்து நிற்கச் செய்யாது மாறிப்பிறக்கச் செய்வதால் 'மிருத்தியு' என்றும், அறிவை மயங்கிக் கிடக்கச் செய்வதால், 'மூர்ச்சை' என்றும், உயிரை மாசுறச் செய்வதால் 'மலம்' என்றும், இருள்போல நின்று உயிரின் அறிவை மறைப்பதால் 'அஞ்சனம்' என்றும், உயிருக்கு அறியாமையைச் செய்வதால் 'அவித்தை' என்றும் உயிர்தன் வழி இயங்காதவாறு அதனை மறைத்து நிற்பதால் 'ஆவிருதி' என்றும் ஆணவமானது பல்வேறு காரணப் பெயர்களைப் பெறுகின்றது.[23]

ஆணவமலம் பல்வேறு உணர்வு நிலைகளை உயிரிடத்துத் தோற்றுவித்துக் காரியப்படுகின்றது.

'குருவினாலும் நூலினாலும் தீயன என்று அறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கமாகிய மோகம், தன்னைப் போல் ஒருவரும் இல்லை என மதித்தலாகிய மதம், கிடைக்காத பொருளிடத்தில் ஆசைப்படுதலாகிய இராகம், கிட்டிய பொருள் பிரிந்தவிடத்து வருந்துதலாகிய கவலை, சுற்றத்தை விட்டுப்பிரிந்ததற்கும் ஆற்றாமையுறும் தாபம், அந்த ஆற்றாமையால் மலர்ச்சி இன்றி வாடுதலாகிய வாட்டம், எந்தச் செயலும் வினையின் வழியாய் நிகழ்வது என்று எண்ணாது தான் செய்ததாகவும் பிறர் செய்ததாகவும் எண்ணுகின்ற விசித்திரம் ஆகிய இவை ஏழும் ஆணவத்தின் காரியங்களாய் உயிரிடத்துத் தோன்றி உயிரை மயக்கச் செய்யும்[24].

அறியாமையைச் செய்யும் ஆணவம்

ஆணவமானது உயிரை உணரவிடாது தடுத்து அறிவை மறைத்து நிற்கின்றது. ஆணவத்தின் இத்தகைய மறைப்பாற்றலை மிகச் சுருக்கமாக, 'மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்'[25] என்று சிவப்பிரகாசமும், 'அறியாமை ஆணவம்'[26] என்று உண்மை விளக்கமும் 'அஞ்ஞானம் காட்டும் ஆணவம்'[27] என்று சித்தியாரும் கூறுகின்றன.

ஆணவமானது உயிரின் அறிவை மறைப்பதற்குச் செம்பில் கூடிய களிம்பு உவமையாகிறது. 'செம்பின் நிறத்தைக் களிம்பு அதனுடன் தோன்றி அதை மறைத்து நிற்பது போல ஆணவமும் உயிருடன் சேர்ந்து உயிரை மறைத்து நிற்கின்றது. உயிருக்குச் செம்பும் உயிருடனேயே இருந்து அதன் உண்மைத் தன்மை தெரியாது மறைக்கும் ஆணவத்திற்குச் செம்புடன் தோன்றிச் செம்பின் ஒளியை மறைக்கும் களிம்பும் உவமைகளாகும்'[28].

"....   ....   உருவை ய
மாமணியை உள்ளடக்கும் மாநாகம் என்னிதனைத்
தான் அடக்கும் காட்டத் தகுதியும்போல் – ஞானத்தின்
கண்ணை மறைத்த கடிய தொழில் ஆணவத்தால்" [29]

என்று போற்றிப் பஃறொடையும் ஆணவமல மறைப்புக்கு உவமை கூறுகின்றது. அதாவது உயிருக்கு விளக்கத்தைத் தருகின்ற அறிவை அறிவற்ற ஆணவம் மறைத்திருப்பதற்கு ஒளியையுடைய மாணிக்கத்தின் ஒளி புறத்தே தெரியாதவாறு மறைத்திருக்கின்ற பாம்பின் தன்மை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் மாணிக்கம் என்ற ஒன்றிருக்கின்றது என்று புறத்தே தோன்றாது பாம்பு மறைப்பதைப் போல உயிர்க்கு அறிவென்று ஒன்றிருக்கின்றது என்பதையும் ஆணவம் தோன்றாது செய்கின்றது. இதே பொருளில் தான் நெருப்பை மறைந்திருக்கும் விறகைப்போல என்ற உவமையும் அமைந்துள்ளமை புலனாகின்றது.

ஆணவமென்னும் இருள்

உயிர்க்கு அறியாமையைச் செய்வதன் காரணமாக ஆணவமலத்தை 'இருள்'[30] என்று சாத்திரங்கள் கூறும், இருளானது காணும் பொருள்களைக் காணவொட்டாது மறைப்பது போல ஆணவமும் உயிரின் அறிவைக் காணவொட்டாது மறைப்பதால் அதன் செறிந்த தன்மையைக் காட்டுவதற்கு 'இருள்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உவமைகளும் உருவகங்களும் படிமங்களும் பயன்படுத்தப்பட்டிருப்பதிலிருந்து சைவசித்தாந்திகள் கூறும் ஆணவத்தின் மறைப்பாற்றல் எவ்வளவு ஆழமானது என்பது புலனாகிறது.

கண்ணுக்குக் காணும் தன்மை இருப்பினும் இருளைப் பொருந்தி நிற்கின்ற பொழுது அந்த இருளின் வடிவாய்க் கண் இருக்கும். அதுபோல உயிர் அறிவுடையதாயினும் ஆணவத்தைப் பொருந்தி நிற்கின்ற பொழுது அதைவிட்டு நீங்குவதற்கு வழியின்றி அதனுடன் வியாபித்து நிற்கும் என்பதைச் சிவப்பிரகாசம்,

"....   .....   இருள்மருவும் அவர்விழிபோல் அதுவாய்

நீங்கும்வகை இன்றிநித்த வியாபகமாய்" [31]

என்ற பாடலடிகளில் விளக்குகின்றது. இக்கருத்தையே சிவஞானபோத உரையாசிரியரும் 'ஒளி மழுங்கிய கண்ணினார்க்குக் கதிரவன் இரவின் கண் உள்ள இருளாகவே தோன்றுவான். அதுபோல மலப்பிணிப்புள்ள கட்டு நிலையில் உள்ளவர்களுக்கு இறைவன் விளங்கித் தோன்றமாட்டான்'[32] என்று குறிப்பிட்டுள்ளார். எனவே ஆணவமலத்துடன் இருக்கக்கூடிய உயிர்க்கு ஒளி மழுங்கிய கண் உவமை, இறைவனுக்குக் கதிரவன் உவமை.

'இருளொளிர இருண்ட மோகம்'[33] என ஆணவத்தைச் சிவப்பிரகாசம் குறிப்பிடுகின்றது. ஆணவத்தின் செறிவை, அதன் மறைப்புச் சக்தியைக் குறிக்க இருள்போன்ற ஆணவம் என்று கூறாமல் ஆணவத்திற்கு முன் இருளும் ஒளியுடையது என்று சொல்லும்படியான இருண்ட பேரிருள் ஆணவம் என்று கூறுகிறது.

திருவருட்பயன் ஆணவத்தை 'இருள் மலம்' என்றே குறிப்பிடுகின்றது.

"ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்

இருபொருளும் காட்டாது இது" [34]

என்னும் பாடல் உலகத்திலுள்ள புற இருளானது மற்றைய பொருள்களைக் காட்டாது. இருப்பினும் தன்னுடைய உருவத்தைக் காட்டும். ஆனால் இந்த ஆணவ மலமானது பிற பொருள்களின் தன்மையை மறைப்பதும் அல்லாமல், தனது இருப்பையும் மறைக்கின்றது. எனவே இது இருளினும் கொடியது என்று ஆணவ மலத்தின் மறைப்பாற்றலைக் குறிப்பிடுகிறது திருவருட்பயன்.

உலகத்திலுள்ள பலவகைப்பட்ட பொருள்களையும் அவற்றின் தன்மை தோன்றாமல் ஒருவகைப் பொருளாக மறைத்துத் தோற்றுவிக்கும் பொருள் இருள் உருவான பொருள் அன்றி வேறு பொருள் அன்று. இருள் மிகுந்த இரவில், வெறியிலே சுவர் இருந்தால் அது சுவராகத் தோன்றாது; கிணறு கிணறாகத் தோன்றாது; இவற்றை மறைப்பது புற இருள் ஆகும். அதுபோல பதியின் தன்மை பசுவின் அறிவுக்கு எட்டாமல் மறைக்கப்படுதற்குக் காரணம் அவற்றை மறைக்கும் இருள் போன்ற ஒரு பொருள் இருத்தல் வேண்டும். அப்பொருளே அக இருளாகிய 'ஆணவமலம்' ஆகும் என்ற கருத்தை.

"இருள் ஆனது அன்றி இலதுஎவையும் ஏகப்

பொருள் ஆகி நிற்கும் பொருள்" [35]

என்னும் திருவருட்பயன் பாடல் விளக்குகிறது.

ஆணவத்துடன் கூடிய உயிர்க்கு ஆந்தையின் கண்ணை உவமையாகக் கூறுகின்றது திருவருட்பயன். அதாவது சூரிய ஒளியில் இருந்தும் ஆந்தைக்குக் கண் தெரியாததற்குக் காரணம் கண்ணில் உள்ள தசை நாரின் அமைப்பாகும். அதுபோல இறையருள் இருந்தும் ஆணவத்துடன் கூடிய உயிர்க்கு இறைவனின் திருவருளாகிய ஒளி தெரிவதில்லை. இதனைத் திருவருட்பயன்,

"ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே

யாமன்கண் காணா தவை" [36]

என்னும் பாடலால் விளக்குகிறது. கூகையின் இயல்பை,

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்

வேந்தர்க்கு வேண்டும் பொழுது" [37]

என்று வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

ஆணவம் எண்ணில்லாத உயிர்களைப் பொருந்திக் கலந்து இருப்பினும் ஆணவமாகிய நங்கை தன் கற்பிலிருந்து தவறாதவள் என்பதை,

"பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டென்றும்

கணவற்கும் தோற்றாத கற்பு" [38]

என்று திருவருட்பயன் காட்டுகின்றது. இங்கு ஆணவம் பெண்ணாக உருவகப்படுத்தப்படுகிறது. கற்புள்ள பெண் தன் கணவனுக்கே தன்னைக் காட்டுவாள். ஆணவமாகிய பெண்ணோ பலரைப் பொருந்தி நின்றாலும் யாருக்குமே தன்னைக் காட்டமாட்டாள் என்று கூறி ஆணவமாகிய பெண் கற்புடையவள் என்று இகழ்ச்சிக் குறிப்புடன் சொல்லப்படுகிறது.

ஆணவமும் சிவஞானமும் பொருந்தும் இடம் உயிர் என்றாலும் இரண்டும் ஒரு சேர உயிரிடத்துப் பொருந்தாது. சிவஞானம் உயிரிடத்துற்ற போது ஆணவம் தன் வலுவிழந்து விடும். ஆணவம் வலுவிழக்கவும் உயிருக்கு இறைவனருள் வேண்டும் எனக் கூறும் பொழுது கொடிக்கவி,

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்" [39]

என்று கூறுகின்றது. 'பாயிருள்'[40] என்று உண்மைநெறிவிளக்கமும், 'நிறை இருள்'[41] என்று வினாவெண்பாவும் ஆணவமலத்தை இருள் என்றே குறிப்பிடுவதைக் காணலாம்.

ஆணவமலம் உயிர்களை மறைக்கும் நிலைகள்

ஆணவமலத்தை இருள் என்று குறிப்பிடுவதன் காரணமாக உயிரிடத்துள்ள இம்மலமே மறைத்தல் தொழிலைச் செய்வது என்பது புலனாகிறது. ஆணவமலம் உயிரறிவை இரண்டு நிலைகளில் நின்று மறைக்கின்றது. ஒன்று அநாதியே உயிர் பிறப்புக்கு உட்படாத கேவலநிலையில் நின்று மறைப்பது; மற்றொன்று உயிர் பிறப்புக்கு உட்பட்டு பல பிறவிகள் எடுக்கும் சகல நிலையில் நின்று மறைப்பது. ஆணவம் உயிரின் கேவலநிலையில் அறிவைத் தடுத்து அறியாமையைச் செய்யும் பொழுது 'ஆவரக சத்தி' எனப்படும். ஆணவம் ஒன்றாயினும் பல ஆன்மாக்களையும் பிணித்து நிற்பதால் பல சத்திகளை உடையதாயிற்று. அதனால் எண்ணருஞ் சத்திகளை உடையது எனப்பட்டது. 'ஒன்றதாய் அநேக சத்திகளை உடையதாய்'[42] என்று சித்தியாரும் கூறக்காணலாம். ஆவரகசத்தி என்பது ஆணவம் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை முழுவதும் அடக்கிவிடும். ஆன்மா என்ற ஒன்று உண்டு என்பதையே தோன்றாமல் மறைத்துத் தானேயாய் இருக்கும். ஆணவம்

அறியாமையைச் செய்யும் பொழுது ஆவாரக சத்தி என வழங்கப்பெறும். மற்றொன்று 'அதோநியாமிகா சத்தி' என்று கூறப்படும்.

அதோநியாமிகா சத்தி என்பது கன்மமும் மாயையும் வந்து சேர்ந்த போது உறவினைப் பகையென்றும் பகையினை உறவென்றும் மாறியுணருமாறு விபரீத ஞானத்தைத் தரும். இவ்வாறு ஆணவம் மயக்கத்தைச் செய்யும் போது அதோநியாமிகா சத்தி என வழங்கப்பெறும்.

இவ்வாறு கேவலநிலையிலும் சகல நிலையிலும் ஆணவமலம் உயிரின் அறிவை, இருள் ஒன்றாய் இருந்து பல கண்களுடன் கூடி மறைப்பது போல ஒன்றாயிருந்து பல உயிர்களுடன் கூடி மறைக்கின்றது.

ஆணவத்தின் ஆவாரக சத்தி உயிரின் அறிவை மறைப்பதால் தான் பதியின் பேரருள் ஒளி எங்கும் நிறைந்திருப்பினும் அதைக் காண இயலாது உயிர் உலகப் பொருள்களில் மயங்கிக் கிடக்கின்றது. இம்மயக்கத்தை விளக்க வெள்ளத்துள் இருந்தும் அவ்வெள்ளத்தைப் பயன்படுத்தாது நாவறண்டிருத்தல், விரிந்து எங்கும் கதிரவன் ஒளியிருந்தும் இருள் இன்னும் நீங்கவில்லை என்று நினைத்தல் ஆகிய உவமைகளைத் திருவருட்பயன்,

"வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்து இருளாம்
கள்ளத்து இறைவர் கடன்"[43]

என்னும் பாடலில் செறித்து வைத்துள்ளமையைக் காணலாம். திருவள்ளுவரும் ஆவாரகசத்தியை, 'இருள்சேர் இருவினை'[44] 'இருள் நீங்கி இன்பம் பயக்கும்'[45] எனவரும் குறட்பாக்களில் 'இருள்' என்று குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

ஆணவத்தின் அதோநியாமிகா சத்தியை விளக்கப் பாற்கடலில் உள்ள மீன்கள் அக்கடலில் உள்ள உயர்ந்த பாலை உண்ணாமல் சிறு மீன்களைப் பிடிக்க அலைவதும், பாற்கலனின் மேலே நிற்கும் பூனை அதை உண்ணாது அருகிலுள்ள கரப்பான் பூச்சியைப் பிடிக்க முயல்வதுமான உவமைகள் திருவருட்பயனில் கூறப்பட்டுள்ளன. இவற்றை,

"பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து அருள்உயிர்கள்

மால்ஆழி ஆழும் மறித்து"[46]

என்றும்,

"பரப்பு அமைந்து கேள்மின் இது பால்கலன்மேல் பூனை

கரப்பு அருந்த நாடும் கடன்"[47]

என்றும் வரும் பாடல்களால் அறியலாம். எனவே உலகப் பற்றாகிய மயக்க உணர்வு உயிர்களிடத்தில் ஏற்படுவதற்குக் காரணம் அதோநியாமிகா சத்தி என்பது இவ்வுவமைகள் வழிப் புலனாகிறது. இச்சத்தியைத் திருவள்ளுவர்,

"பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்

மருள்"[48]

என்று குறிக்கிறார்.

உயிர்க்கு ஆணவமலம் செயற்கையே

உயிர்க்கு ஆணவமலம் மயக்கத்தைத் தரும் தன்மையானது செயற்கையாகும். ஆணவமலம் உயிருடன் அநாதியானது. உயிரை இடையில் பற்றியதன்று. உயிரைப் பற்றியதெனின் உயிர் இறைவனைப் போலத் தூய்மை உடையதென்றாகிவிடும். தூய்மையான உயிர் தனக்குத் துன்பத்தைத் தரும் ஆணவத்தைப் பற்றாது. ஆணவம் சடப்பொருள் ஆதலால் தானே சென்று உயிரைப் பற்றாது. உயிர்க்கு நலம் தரும் இறைவன் ஆணவத்தை உயிரைப் பற்றுமாறு செய்யான். எனவே, உயிரின் துன்பத்திற்குக் காரணமாகிய ஆணவம் உயிர் என்று உண்டோ அன்றே நெல்லுக்கு உமியும், செம்பினில் களிம்பும் அவ்வவற்றிற்குக் குற்றமாய் அவற்றைப் பற்றியிருப்பது போல உயிரைப் பற்றியிருக்கும். செம்பிற்கு அதன் கண் உள்ள களிம்பு குற்றமேயாகும். அக்குற்றம் செம்பு என்று உண்டோ அன்றே உண்டு. அதனைப் புளி முதலியவை இட்டுத் துலக்குங் காலத்து களிம்பு நீங்குகிறது. துலக்கப்பட்ட செம்பில் பின்பும் களிம்பு மேலிடுதல் என்பது அது அதனை விட்டு நீங்காமையினாலாகும். ஆயினும் இரசவாதம் செய்வோர் செம்மைப் பதம் அறிந்து இரச குளிகையைச் சேர்க்கும் பொழுது அக்களிம்பு முழுவதும் நீங்க செம்பு பொன்னோடு ஒத்த

தன்மையுடையதாய் விளங்கும். ஆகவே களிம்பாகிய குற்றம் செம்பிற்குச் செயற்கையே அன்றி இயற்கையன்று என்பது தெளிவாகிறது.

மேலும், அரிசி தோன்றும் பொழுது உமியோடு கூடத் தோன்றுகின்றதே அன்றித் தனியாய்த் தோன்றுவதில்லை. ஆயினும் அரிசிக்கு உமி குற்றமேயன்றிக் குணம் அல்ல. உமி பின்பு அரிசியை விட்டு நீங்க அரிசி தூய்மை பெற்று விளங்குகிறது. ஆகவே உமியாகிய குற்றம் அரிசிக்குச் செயற்கையே அன்றி இயற்கை அன்று என்பது தெளிவாகும். நெல்லினை உமியும் செம்பினைக் களிம்பும் மறைப்பதைப் போன்றே ஆணவமும் உயிரறிவை மறைக்கின்றது. உயிரின் அறிவை மறைக்கும் ஆணவமும் உயிர்க்கு ஏற்பட்ட குற்றமின்றிக் குணமில்லை என்கிறது.

ஆணவம் உயிர்க்குக் குணமல்ல என்று சித்தியாரும்.

"குருடன்தன் குணம் அவித்தை
எனில்பாம் குருடன் ஆகும்
குருடன்தன் கண்ணின் குற்றம்
கண்ணின்தன் குணமோ? கூறாய்
மருள்தன்தன் குணம் அது ஆகி
மலம்அசித்து ஆகி நிற்கும்"[49]

என்ற பாடலில் குறிக்கக் காணலாம்.

அதாவது சடமாகிய ஆணவம் உயிரின் இயற்கைக் குணம் என்றால் உயிரும் சடமென்றாகிவிடும். ஒரு குருடனுக்குக் கண் தெரியாமை கண்ணின் குணமில்லை, ஒளியை மறைத்து நிற்கும் படலத்தின் தன்மையது போல உயிரின் அறிவை மறைத்து நிற்கும் ஆணவமலமும் உயிரின் குணமன்று; குற்றம். கண்ணின் ஒளியை மறைக்கும் படலம் கண்ணுக்கு ஏற்பட்ட குற்றமாகும். இவ்வாறே உயிருடன் கூடிய ஆணவமும் உயிர்க்குக் குற்றமாகும். அறிவே உயிர்க்கு இயற்கைக் குணமாகும். அறியாமையைச் செய்யும் ஆணவம் உயிர்க்குச் செயற்கையாகும் என்றும் இயல்பில்லாத செயற்கை நீக்க நீங்கும் தன்மையுடையதாகும்.

மாயை கன்மங்களின் வேறு நிற்பது ஆணவம்

மாயையும் கன்மமும் அநாதியான மலங்களே. எனினும், ஆணவம் உயிரை விடாது பற்றியிருப்பது போலன்றி அவை காரணநிலையில் உயிர்களை விடுவதும் காரிய நிலையில் பற்றுவதுமாய் இருக்கும். ஆணவமலத்திற்குப் பகைப் பொருள்களாய் அதனை நீக்குவதற்கு இறைவனால் உயிர்களுக்கு இடையே கொடுக்கப்பட்டவை மாயையும் கன்மமுமாம். அதனால் இவை 'ஆகந்துக மலம்' எனப்படும். (ஆகந்துகமலம் – இடையில் வந்த அழுக்கு).

மும்மலங்களுள் ஆணவத்தின் நிலைவேறு ; ஏனைய மாயை கன்மங்களின் நிலை வேறு ; ஆணவம் உயிரைப் பற்றி நிற்றலின் அதற்கு இடம் உயிர். மாயை கன்மங்கள் இறைவனது உடைமையாய் இருத்தலின் அவற்றிற்கு இடம் இறைவனே ஆவான். இது இட வேற்றுமையாகும். ஆணவம் உயிரறிவை மறைக்கச் செய்கிறது. மாயை, கன்மங்கள் உயிர் செய்த வினைக்கேற்ப அதன் இன்பதுன்பங்களை நுகர்விக்கச் செய்து உயிரது அறிவை விளக்கும் தன்மை பெற்றனவாகும். இது தொழில் பற்றிய வேற்றுமையாகும். எனவே ஆணவத்திற்கும் இம்மலங்களுக்கும் இடம், தொழில், வேற்றுமை உளவாதலை அறியலாம்.

மாயை கன்மங்களுக்கு வேறாக ஆணவம் உண்டு என்பதனை,

"அந்நியமா னதைஉயர்த்தி அநனியமாய் நிறைந்த
அறிவு அறியா மையினானும் அருள்நிலவும் காலம்
தன்னில் அவ னேயாவு மாய்நின்ற தொன்மை
தாமுணர்த லானும் உயிர் தானென ஒன்று இலதாய்
மன்னியிடும் மலமாயை கன்மங்கள் மாறி
வந்திடும் இங்கு இதுவழுவாது ஆதலினால் மனத்தால்
உன்னிய திருவருளை ஒழியமலம் உளதென்(று)
உணர்விதால் அதனுண்மை தெரிவிதாம் உனக்கே"[50]

எனவரும் சிவப்பிரகாசப் பாடலாலும் உணரலாம்.

ஆணவம் உயிர்களுக்கு வேறாய் நிலையற்ற இவ்வுலகை நிலையுடையது என அறிவித்து நிற்பது. அறிவாகிய இறைவனை அறியாமலும் உயிர் திருவருள் பெற்ற தூய நிலையில் சிவமாம்பொருளே எல்லாமாய் நின்ற பழமையை உயிர் அறியும்படி நிற்கும். உயிர் என்பதொரு பொருள் இல்லை எனும்படி அவ்வுயிரேயாய் ஆணவம் நிலைபெற்றிருக்கும். மாயையும் கன்மமும் உயிர், உலகு, கருவி முதலியவற்றோடு கட்டுண்ட நிலையில் பற்றுவதும் கட்டற்ற நிலையில் விடுவதுமாய் மாறி நிற்கும்.

ஆணவம் தான் உயிரை மறைக்கும். மாயை உயிரை விளக்கும். அதனால் ஆணவத்தினின்று மாயை வேறானது. மாயை உயிரை மறைப்பதில்லை என்பதைச் சிவஞானசித்தியார் குறிப்பிடுகிறது. 'கதிரவனை மேகம் மறைத்தால் போல் உயிரினை மாயை மறைக்கும் என்றும், மேகம் விலகியதும் கதிரவன் ஒளி விளங்கித் தோன்றுவது போல் மாயை ஒழிய உயிரின் அறிவு விளங்கித் தோன்றும் எனும் கொள்கையை மறுத்து அவ்வாறெனில் மாயையின் சார்பால் உயிரின் அறிவு, செயல்கள் இல்லாதொழிய வேண்டும். இவ்வாறில்லாமல் மாயையின் படைப்புக்களாகிய உடல் முதலியவற்றின் சார்பால் உயிரின் அறிவு செயல்கள் விளக்கம் பெறுகின்றன. அவை நீங்கினால் அவற்றின் மறைப்பு ஏற்படுகின்றது. எனவே மாயை விளக்கும் கருவியேயன்றி மறைக்கும் கருவியன்று[51] என்று கூறுகின்றது.

மேலும் ஆணவம், மாயையின் செயல்பாடுகள் வேறு வேறு என்பதைச் சிவஞான சித்தியார்,

"சோதி யிருளென வேறாமன்றே"[52]

என்ற உவமையால் விளக்குகிறது. ஆணவம் உயிருடன் சேர்ந்து உயிரறிவை மறைத்தமையால் அது இருள் போன்றது என்றும் தன் காரியங்களாகிய உடல் முதலியவற்றின் வழி உயிரை விளக்கம் பெறச் செய்வதால் மாயை அவ்விருளினை அகற்றும் விளக்குப் போன்றதென்றும் கூறி ஒளியும் இருளும் போல ஆணவமும் மாயையும் தம்முள் வேறுபட்டன என்றும் கூறுகிறது.

முத்தி நிலையில் ஆணவம்

உயிரது அறிவை மறைத்து நிற்கும் ஆணவம் முத்தி நிலையிலும் அழிவதில்லை. மாறாக இறைவனது திருவருள் முன் தன்வலியிழந்து அடங்கிக் கிடக்கும். முத்தியைப் பெற்ற உயிரிடத்து ஆணவம் அழிந்துவிடும் என்றால் ஆணவம், என்றும் உள்பொருள் ஆகாது போய் விடும். அழியாது உயிருடன் முத்தி நிலையிலும் இருக்கும் என்றால் அறிவையுள்ள சிவத்துடன் கூடிப் பேரின்பத்தில் திளைப்பதற்கு அவ்வாணவம் தடையாகவே இருக்கும். மாயையின் காரியங்கள் தேவையில்லையென்றாகிவிடும். அவ்வாறெனில் முத்தி நிலையில் ஆணவம் எவ்வாறு இருக்குமெனில் அந்த மலத்தின் காரியமாயுள்ள சத்தியழிந்து அதனுடைய காரணமாகிய நித்தியத்தன்மை அழியாது இருக்கும். இவ்வாறு முத்தியில் ஆணவத்தின் நிலை பற்றி உமாபதி சிவாச்சாரியார் தம் சிவப்பிரகாசத்தில்,

"அழிந்திடாது ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம்
அடைந்திடா மிடைந்திடாவே"[53]

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது முத்தி நிலையில் ஆணவம் அழிவிலா ஒளியின் முன் நிற்காத இருள் அழிவதும் முனைத்து நிற்பதுமன்றி அடங்கி நிற்பது போல அடங்கி நிற்குமேயொழிய முற்றிலும் அழியாது என்பது இதன் கருத்தாகும்.

சுத்த நிலையில் இறையருளை உயிர் நேரே பெற்று விளங்குவதால் அப்பேரொளியின் முன் ஆணவத்தின் மறைத்தல் சத்தியும் மாயை கன்மங்களது சிறுவிளக்கச் சத்தியும் சிறிதும் முனைத்து நிற்காது அடங்கிக் கிடக்கும். இது கதிரவனின் ஒளி வருவதற்கு முன்னே இருளின் சத்தியும் விளக்கின் சத்தியும் புலப்பட்டு நின்று கதிரவனின் ஒளி வந்தபொழுது அவை அதன் முன்னர்த் தோன்றாது அடங்குவதை ஒக்கும். கதிரவன் ஒளியின் முன் விளக்கொளி அடங்கி நிற்கிறதே அன்றி அழியாது. அதுபோலவே இருளும் கதிரவன் முன் அடங்குமே அன்றி அழியாது. அது சூரிய ஒளி உள்ளபொழுதும் பிற பொருள்களின் நிழல் தோன்றுவதாலும் இவ்வொளி மறைந்தவுடன் முன்போலவே இருள் வந்து சூழ்தலானும் அறியப்படும்.

பெத்தத்தில் இறைவனது இன்பம் உயிரிடத்து விளையவொட்டாது தடுத்து நின்ற ஆணவமலம் முத்தியில் அங்ஙனம் செய்யமாட்டாது வாளாஇருக்கும். எனவே முத்தி பெற்ற உயிரிடத்து ஆணவம் வலு இழக்கும் என்பதனை, மனவாசகங்கடந்தாரின்,

"முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅணு போகத்தைத் துய்த்தல்அணு – மெத்தவே
இன்பங் கொடுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்"[54]

எனவரும் உண்மை விளக்கப்பாடலால் உணரலாம்.

முத்தி நிலையில் உயிர் பேரின்பத்தைத் துய்க்க, இறைவன் உயிர்க்குப் பேரின்பத்தைத் தர இந்நிலையை விளைவிப்பதே ஆணவம்தான் என்று உண்மை விளக்கம் கூறுகிறது. ஆணவம் அங்கு அடங்கிவிடும் தன்மையைப் புலப்படுத்துகிறது. எனவே உயிர் அவ்வின்பத்தை நுகர்வதற்கு மலநீக்கமும் காரணமாகும்.

இவ்வாறு உயிர் கருவி கரணங்களின்றி நிற்கும் கேவல நிலையிலும் அவற்றோடு கூடிநிற்கும் சகல நிலையிலும் அவற்றின் நீங்கித் திருவருள் வயப்பட்டு நிற்கும் முத்தி நிலையிலும் ஆணவத்தோடு பிணைந்து நிற்றலின் ஆணவத்தினைக் 'கவ்வியமலம்' என்கிறது உண்மை நெறி விளக்கம்.[55]

கன்மம்

வினை என்பது செயலைக் குறிக்கும். வினை, கன்மம், செயல், கர்மம் என்னும் சொற்கள் ஒரே பொருளையே தருகின்றன. உயிர் செய்யும் வினையால் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு வினை முதற்காரணமாயும் முயற்சி துணைக் காரணமாயும் அமைகின்றன. உள்ளது தோன்றும் இல்லது வாராது என்னும் சற்காரிய விதிப்படி இயற்கையாய் உள்ள வினையைத்தான் பின்பு ஒருவன் செயற்கையாய்ச் செய்கின்றான். இயற்கை வினை காரண கன்மம் என்றும் செயற்கையாய் ஒருவன் செய்வது காரிய கன்மம் என்றும் கூறப்படும். இயற்கையாய் உள்ள மூலகன்மம் பாகுபாடின்றி ஒன்றாய் நிற்க நல்லது தீயதெனக்

காரிய கன்மம் இரண்டாய் நிற்கும். மூலகன்மம் என்றும் இருத்தலால் வினை அநாதி என்றும், என்றும் இருப்பினும் உயிர்களின் செய்கையால் தோன்றி, நுகர்ச்சியால் அழிவதால் ஆதி அந்தம் உடையது என்றும் இருவகையாகச் சொல்லப் பெறும். இவ்வாறு அநாதி என்பது காரணநிலை நோக்கியும் ஆதி அந்தம் உடையது என்பது காரியநிலை நோக்கியும் கூறப்பெறும்.

உயிர்களின் அறிவு ஆணவமலம் காரணமாகப் புறநோக்கில் செல்லும் பொழுது புறப்பொருள்களில் விருப்பு வெறுப்பு நிகழும். அவற்றின் காரணத்தால் நல்லன தீயன செய்ய நினைத்தல், அவற்றைச் சொல்லல்,சொன்னவாறு செய்தல் முதலியன நிகழும். இவ்வாறு மனத்தின் நினைப்பால் வாயினின்றுத் தோன்றும் சொற்களால், உடலால் செய்யும் தொழில்களால் தோன்றும் வினைகள் முறையே மானத கன்மம், வாசிக கன்மம், காயிக கன்மம் எனப்பெறும். எனவே உயிர்கள் தம் மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் நல்வினை, தீவினைகளைத் தேடிக் கொள்கின்றன.

வினை பயன்தரும் வகையில் சஞ்சிதம், ஆகாமியம்,பிராரத்தம் என மூவகைப்படும். உயிர்க்கு வினையால் வரும் துக்கங்களை மூவகைப்படுத்தலாம். அவை,

"ஆதி தைவிக மாதி பௌதிகம்
ஆதி யாத்தியான் மிகம்"[56]

என்று குறிப்பிடப்படுகின்றன. 'ஆதி தைவிகம்' என்பது தெய்வத்தால் வரும் துன்பம், 'ஆதி பௌதிகம்' என்பது பஞ்சபூதங்களால் வரும் துன்பம், 'ஆதி ஆன்மிகம்' என்பது உயிர்களால் வரும் துன்பமாகும். வினை என்ற சொல்லை,

"அநாதியாய் மலத்தைப் பற்றுதல் உயிரின்
வினையாய்"[57]

எனவரும் சிவஞானபோதத்தடியால் உணரலாம்.

இன்ப துன்பங்களுக்கு வினை முதற்காரணம்

ஆணவ மலத்தால் வரும் விருப்பு வெறுப்புகள் காரணமாக உயிர்களுக்குக் கன்மத்தைப் பற்றும் முனைப்பு உண்டாக இறைவன் மூலகன்மத்தைக் காரணமாயையொடு உயிர்களுக்குச் சேர்ப்பிப்பான். அவை காரியப்படும்பொழுது உயிர் நல்வினை தீவினைகளைச் செய்யும். அதன் காரணமாக இன்ப, துன்ப உணர்வுகள் தோன்றும். எனவே உயிர்களின் இன்ப, துன்பங்களுக்கு முன்னைச் செய்த வினைகள் காரணம் ஆகும்.

உயிர் வினைப்பயனை இறைவனால் அனுபவிக்கின்றது என்பதைச் சிவஞானபோதம் "காந்த பசாசம் போல்"[58] என்ற உவமையால் விளக்குகின்றது. காந்தத்தின் நேராக இரும்பைக் கூட்டினவித்து அது இழுத்துக் கொள்ளும். அதுபோல வினைப்பயனை உயிர்களுக்கு இறைவன் நேராகக் கூட்டும்பொழுது வினைப்பயனை உயிர் அனுபவிக்கிறது என்பதாம்.

இருவினை என்பதில்லை. உயிர் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் எல்லாம் இயல்பாகும் என்பர் உலகாயதர். இயல்பு என்பது ஒரு தன்மையாகாது. ஒரே பொருளில் இரு தன்மைகள் என்பது இயல்பல்ல. எனவே மாறுபட்ட இன்ப துன்பங்கள் உயிரிடத்துப் பொருந்த ஒரு காரணம் வேண்டும். அக்காரணம் இருவினையே. இதனைச் சித்தியார்,

"இருவினை என்னை இன்ப
துன்பங்கள் இயல்பு அது என்னில்
ஒருதன்மை இயல்புக்கு உள்ளது
ஒருவனுக்கு இரண்டு செய்தி
வருவது ஏன்? மலரும் தீயும்
மருவலின் வாசம் வெம்மை
தருவது என்? நீர் என் செய்து
தான் இயல்பு ஆகும் அன்றே"[59]

என்ற பாடல் மூலம் விளக்குகின்றது. நீருக்குத் தண்மை இயற்கையானது. அதனுடன் மலரும் தீயும் சேர்வதால் மணமும் வெம்மையும் உண்டாகிறது.

எனவே நீருக்கு மணமும் வெம்மையும் இயற்கையானது என்று கூறமுடியாது. அதுபோல உயிருக்கு ஒரே தன்மையான அறிவே இயற்கை. இன்ப, துன்பங்கள் இயற்கையல்ல. அது இருவினையின் சேர்வதாலேயே இன்ப, துன்பங்கள் ஏற்படுகின்றன. பூ நல்வினைக்கும் நெருப்புத் தீவினைக்கும் பூவின் வாசம் இன்பத்துக்கும் நெருப்பின் வெம்மை துன்பத்திற்கும் உவமைகளாகும்.

உடம்பு சடமாதலால் இன்ப துன்ப உணர்வுகளைப் பெறாது. உயிர் பெறும் இன்ப, துன்பங்களுக்குக் காரணம் இருவினையேயன்றி முயற்சி அன்று. உயிரிடத்துத் தோன்றும் விருப்பு வெறுப்புக்களை முற்றுவிக்க உயிரால் முயற்சி மேற்கொள்ளப் பெறும்.

முயற்சி இன்ப துன்பங்களுக்கு துணைக் காரணம்

ஒருவன் தான் எடுத்துள்ள இப்பிறப்பில் பொருள் கூட்டி இன்பத்தை அனுபவிக்க விரும்பிப் பெரும் முயற்சி செய்தாலும் எதிர்பார்த்த பயனுக்கு மாறாகப் பெருந்துன்பத்தை அனுபவிப்பதையும் வேறொருவன் முயற்சி எதுவும் செய்யாமலேயே இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. இதன்வழி இப்பிறப்பில் வரும் இன்ப துன்பங்களுக்கும் வெற்றி தோல்விகளுக்கும் அவரவர் செய்யும் முயற்சியும் முயற்சியின்மையும் மட்டுமே காரணமாக அமைவதில்லை, விதியும் காரணம் என்பது தெளிவாகிறது. இதனையே வள்ளுவர்,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்"[60]

என்னும் குறட்பாவில் மறைமுகமாகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் முற்பிறப்பில் செய்த இருவினைகளே உயிர்கள் இப்பிறப்பில் அனுபவிக்கும் இன்ப, துன்பங்களுக்குக் காரணம் என்பதும் வினைகள் செய்வதற்கு முயற்சி துணைக் காரணமாக அமைகின்றது என்பதும் புலனாகின்றன.

ஒவ்வொரு உயிரும் உடலோடு பொருந்தி நின்றே வினைகளைச் செய்கின்றது. அந்தந்த வினைகளுக்கு ஏற்பவே அடுத்த பிறப்பில் உடலைப்

பெறுகின்றது. இவ்வாறு வினையால் உடம்பும் உடம்பால் வினையும் என ஒன்றிலிருந்து மாறி மாறி வருவதற்குச் சிவஞானசித்தியார்,

" .... வித்தின்

இடத்தின் மரம் மரத்தின்

வித்தும்வந்து இடையறா போல்" 61

என்ற உவமையைக் காட்டியுள்ளது. அதாவது வித்திலிருந்து மரமும், மரத்திலிருந்து வித்தும் மீண்டும் வித்திலிருந்து மரமும் எனத் தொடர்ந்து வித்தும் மரமும் வருவது போல் வினை வருகின்றது என்பது இதன் பொருளாகும். ஒரு காரியத்திற்குப் பல காரணங்கள் இருப்பினும் அவற்றுள் ஒன்றே முதன்மை உடையதாய் இருக்கும். மற்றவைகள் எல்லாம் அது காரியப்படுதற்குத் துணையாய் அமையும். மரம்முதலிய காரியங்களுக்கு வித்து என்னும் காரணமே முதன்மை வாய்ந்தது. மண், நீர், காற்று, ஒளி ஆகியன எல்லாம் வித்து முளைத்துப் பயன் தருவதற்குத் துணையாய் அமைவனவே. அதுபோலவே உயிர்களின் இன்ப துன்பங்களுக்கு வினை முதற்காரணமும் முயற்சி துணைக்காரணமும் ஆகும்.

வினையும் பயனும்

உயிர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப வினையைச் செய்வதால் பிறப்பும் வினையும் தொடர்ந்து வரும். செய்த வினையின் பயன் மாறி மாறி வருவதும் உண்டு. வினையானது உயிர்கள் தோறும் செறிந்து உயிர்கள் பிறப்பெடுப்பதற்குக் காரணமாகித் தாம் எடுத்த உடம்புகளின்வழி உயிர்களைப் பல்வேறு நுகர்ச்சிகளைப் பெறும்படியாகச் செய்கிறது. இத்தகைய வினையால் உடம்பும் உடம்பால் வினையும் பிறவியும், 'இடையறாது ஓடும் நீர்ப்பெருக்குப் போலத் தொடர்ந்து வரும்'[62].

ஒரு பிறப்பில் செய்த வினை அடுத்த பிறப்பில் வந்து பயன் தரும். ஆயினும் மிகப் பெரிய புண்ணியங்களும் மிகப் பெரிய பாவங்களும் செய்த பிறப்பிலேயே வந்து பயன் தருதலும் உண்டு. இதனை,

"குற்றொருவரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையேவரும் திண்ணமே"63

என்னும் தேவாரப் பாடலடிகளின் மூலமும் உணரலாம். எனவே வினைகள் தாம் செய்யப்பட்ட முறையிலன்றிப் பின் முன்னாக மாறி வந்து பயன் தரும். அது அவ்வவ் வினையின் தன்மைக்கேற்ப நிகழ்வதாகும் என்றறியலாம். இதை,

"தொடங்கனை வின் அனையாதே தோன்றும் மாறி "64

என்று சிவப்பிரகாசமும் கூறுகின்றது. கீரை, வாழை, தென்னை முதலியன ஒரே காலத்தில் பயிரிடப்படினும் பயன் தருதல் ஒரே காலத்தாய் அமையாததைப் போல இம்மைச் செய்த வினை மறுமைக்கும் அவ்வாறின்றிப் பல பிறவிகள் கடந்தும் கூடப் பயன் தருதல் உண்டு என்ற கருத்து இதன்மூலம் புலனாகிறது.

எனவே இறைவனே அவரவர் செய்யும் வினைக்கு நடுவனாய் நின்று கண்டு அவ்வவ் வினைக்குரிய பயனை உரிய காலத்தில் உரிய இடத்தில் உரிய உடம்பில் கூட்டுவிப்பான். உயிர்க்குள்ள ஆணவமலப் பற்று நீங்கி உயிர் திருத்தம் பெறும் பொருட்டும் இறையுணர்வு எய்தும் பொருட்டும் வினைப்பயன் மாறி மாறி ஊட்டப்படுகிறது.

சித்தியார் வினையானது பயன் தரும்முறை பற்றிக் கூறுகிறது. வினையே பயன்தரும் என்பதையும், வினை கெட்டுப் பயன் தரும் என்பதனையும் வினை செய்தவரின் புத்தியிலே கிடந்து வினை பயன் தரும் என்பதையும் மறுத்து இறைவனே வினைப்பயனைத் தருவான் என்றும் சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய உயிர்களுக்கு முற்றறிவு பொருந்திய முதல்வனே வினைப் பயனைக் கூட்டுவிப்பான் என்றும் கூறுகின்றது.

"முறைதரு செயற்குப் பாரும்
முளரிக்கு இரவியும் போல்
அறைதரு தத்தம் கன்மத்து
அளவினுக்கு அளிப்பன் ஆதி"65

என்று வினைப் பயனை உயிர் இறைவனால் அனுபவிப்பதாகச் சித்தியார் குறிப்பிடுகின்றது.

உழவு முதலான செயல்கள் பயன் தருவதற்கு நிலமும் தாமரை விரிவதற்குக் கதிரவனும் வேண்டப்படுவது போல உயிர்கள் செய்யும் வினைகளின் தன்மைகளுக்கேற்ப அவற்றின் பயனை இறைவன் உயிர்களுக்குக் கூட்டுவிப்பான் என்று கூறுகிறது.

வினைப்பயனை இறைவன் ஊட்டுவித்தல் மருத்துவன் நோயாளிக்கு மருந்து கொடுத்தல் போன்றதே. ஆணவமலம் உயிர்களுக்குள்ள நோய். அதற்கு மருந்தாயுள்ளவை வினைப் பயன்கள். முற்பிறவியின் ஒரு பிறவியில் செய்த இருவினையின் பயனாய் மறுபிறப்பில் இன்ப துன்ப அனுபவமும் அவ்வனுபவத்தால் இருவினையும் அதனால் பிறப்பிறப்பும் அதனால் சுவர்க்க நரகங்களும் என இருவினையும் வினைப்பயனும் தொடர்ந்து வரும். வினைப்பயனும் உடம்பும் சடமாதலால் அவை தாமே உயிர்களைப் பொருந்தா. அவைகளைத் தானே தனதுஆற்றலால் உயிர்க்கு இறைவன் ஊட்டுவான். இறைவனின் இச்செயலுக்கு மருத்துவன் நோயாளிக்கு மருந்து கொடுத்து நோயைத் தீர்க்கின்ற செயலும், அரசன் குடிமக்களுள் கொடியவரைத் தண்டித்துத் திருத்துகின்ற செயலும் ஒப்புமையாகச் சிவஞானசித்தியாரால் குறிக்கப் படுகின்றது. இதனை,

"இருவினை இன்பத் துன்பத்து
இவ்வுயிர் பிறந்து இறந்து
வருவது போவ தாகும்
மன்னிய வினைப் பயன்கள்
தரும் அரன் தரணியோடு
தராபதி போலத் தானே
மருவிடா வடிவும் கன்ம
பயன்களும் மறுமைக் கண்ணே"[66]

என்றுபாடல் விளக்குகின்றது.

மருந்துகளில் சில இனிக்கும் சில கசக்கும். இனிப்பான மருந்து நல்வினையின் பயனாகிய இன்பம். கசப்பான மருந்து தீவினையின் பயனாகிய துன்பம். சில வேளைகளில் அறுத்துக்கீறிச் சுட்டுச் செய்யும் சிகிச்சைகளும் நிகழ்தல் போல மிகப் பெரிய துன்பங்களையும் மிகப் பெரிய தீவினைக்குப் பயனாக இறைவன் உயிர்க்கு ஊட்டுவித்தல் என்பது அவற்றின் மேல்வைத்த கருணையே ஆகும்.

நோயுற்றோருக்குச் செய்யும் மருத்துவ முறைகள் துன்பம் தருமேனும் அதன்பின் நோய் நீங்கப்பெறுதலின் இவ்வாறு செய்தல் இயல்பாம். 'மனுவரசன்' ஒரு மைந்தன் தன் குலத்திற்கு உள்ளான் என்பதையும் உணராது அவன் தன் மார்பில் தேரோட்டி அவன் உயிரை மாய்த்ததற்கு அவன் செய்த கொடும்பாவம் நீங்குவதற்கேயாகும். எனவே மருத்துவர்களும் இம்மனுவேந்தனும் செய்த செயல்கள் பார்ப்பதற்குக் கொடுமை போலத் தோன்றினும் இவை நன்மை கருதிச் செய்யப்பட்டனவேயாகும்'.[67] இவ்வாறு மருத்துவன் செயலையும், மனுநீதிச் சோழன் செயலையும் எடுத்துக்காட்டி அவர்களின் செயல்கள் போன்றதே இறைவனின் செயற்பாடும் என்கிறது போற்றிப் பஃறொடை .

வினைகள் நீங்குவதற்கு வழி என்ன என்பதற்குச் சிவப்பிரகாசம்,

"எல்லையில் பிறவி நல்கும் இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையில் அகலும் ஒன்றுஉடல் பழ வினைகள் ஊட்டும்
தொல்லையில் வருதல் போலத் தோன்றுஇரு வினையது உண்டேல்
அல்லொளி புரையும் ஞானத் தழல்உற அழிந்து போமே"[68]

என்று கூறுகின்றது. அதாவது குருவால் செய்யப்படும் தீக்கைகளால் நெருப்பை அடைந்த வித்து தன் முளைக்கும் ஆற்றலை இழந்து தானும் அழிவது போல உயிரைச் சேர்ந்தே சஞ்சித கன்மமும் தன் ஆற்றலையிழந்து அழியும். பிராரத்த கன்மம் உடலுள்ளமட்டும் செயல்பட்டு உடலுடன் ஒக்க அழியும். ஆகாமிய கன்மம் கதிரவன் ஒளிமுன் இருள் நீங்குவது போலக் குருவால் தோன்றியுள்ள ஞானநெருப்பால் அழிந்து போகும் என்பதாம்.

வினையின் மூவகைப் பாகுபாடு

மூலவினை தொடக்கமில் காலமாக உயிரைச் சார்ந்துள்ளது. அதிலிருந்து நல்வினை தீவினை என அதன் தன்மையால் சொல்லப்படும் இருவினைகளும் மனம் வாக்குக் காயங்களினால் செய்யப்படுகின்றன. அவற்றிற்குப் பயன்களாக வரும் இன்ப துன்பங்களை உயிர்கள் நுகரும்பொழுது அவ்வினைகள் அழிகின்றன. இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காகச் செய்யும் முயற்சிகளால் வினைகள் மீண்டும் உற்பத்தியாகின்றன. அதனால் பிறப்புக்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு இருவினைகளும் 'நுபோற்பத்தி' உடையனவாக உள்ளன. நுபோற்பத்தி என்பதற்கு ஒருவினை அழியும்போது மற்றொரு வினை தோன்றுதல் என்பது பொருள். ஒவ்வொரு பிறப்பின் இறுதியிலும் இருவினைகளும் சூக்குமவடிவில் நின்று பின் பிறப்பெடுக்கும் பொழுது இறைவன் ஆணைப்படி இன்ப துன்பங்களைத் தருகின்றன.

இவ்வாறு தொடர்ந்து வரும் வினைகள் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்று மூவகையாகக் கூறப்பெறும். உயிர்கள் மூலகன்மத்தில் தொடக்குண்டு அது காரிய கன்மமாகின்ற பொழுது அக்காரிய கன்மம் தூலம் சூக்குமம் என இரண்டாகின்றது. நல்லனவும் தீயனவும் ஆகச் செய்யப்படும் தூல வினைகள் 'ஆகாமியம்' எனப்படும். இத்தூல கன்மங்களே புண்ணிய பாவங்களாய்ச் சூக்குமமாய் மறைந்து நிற்கும். இத்தகைய புண்ணிய பாவங்களாகிய சூக்கும வினைகள் 'சஞ்சிதம்' எனப்படும். இச்சூக்கும வினைகள் பின்வந்து பயன் கொடுக்கும் பொழுது 'பிராரத்தம்' எனப்படும்.

ஆகாமியம் எதிர்வினை, வருவினை, மேல்வினை என்றும், சஞ்சிதம் அபூர்வம், பழவினை, தொல்வினை, கிடை வினை என்றும் பிராரத்தம் ஊழ்வினை, நுகர்வினை என்றும் அழைக்கப்படும்.

இப்பிறப்பில் செய்யும் நன்மை தீமைகளாகிய செயல்களில் இப்பிறப்பிலேயே இன்ப துன்ப நுகர்ச்சிகள் ஏற்படும். அவையே புண்ணிய பாவங்களில் நின்று அடுத்த பிறவிக்கு ஏதுவாக இருக்கும். இவ்வாறு ஒரு

பிறவியில் செய்யும் வினையே அப்பிறப்பிலேயே பயன் தருவதுடன் அடுத்த பிறவிக்கும் காரணமாக அமைகின்றது. இக்கருத்தைச் சிவஞானசித்தியார்,

"மேலைக்கு வித்துமாகி

விளைந்தவை உணவும் ஆகி

ஞாலத்து வருமா போல"[69]

என்று உவமையால் விளக்குகின்றது.

உலகத்தில் உணவின் பொருட்டு விளைந்த கனி முதலியன உணவாக முதலில் பயன்படுகிறது. பின்னர் அதுவே அடுத்த பருவத்துக்குரிய வித்துமாய்ப் பயன்படுகிறது. அதுபோல உயிர் செய்யும் வினையும் பயன் தருகின்றது என்பதாம். நிலத்தில் வித்திடுதல் ஆகாமியத்திற்கு உவமை ஆகும். அந்த வித்து இப்பொழுது புத்தி தத்துவத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு பின் பயன்தரும் வரை பூமியில் தங்கி இருப்பது என்பது சஞ்சிதத்திற்கு உவமையாகும். பலன் அனுபவிப்பதற்கு வருவது பிராரத்திற்கு உவமையாகும். சிவப்பிரகாசமும்,

"மேலைக்கு வருவினையது என்னில் அங்கண்

விருப்புவெறுப்பெனஅறி அவ்வினையும் எல்லாம்

மூலத்த வினைப்பயில்வாம் என்னின் நாம் என்

முற்றியதன் பயன்உனக்கு முளைக்கும் என்பர்

ஞாலத்து வினைகள் இது திறனாயும் புந்தி

நண்ணாதவினை நணுகும் வினையென ஒன்றிரண்டாய்

சலத்தான் இதம்அகிதமாம் இதனால் வருமது

செய்திடும் புண்ணியபாவங்கள் என்றே"[70]

என ஆகாமிய வினையைக் குறிக்கின்றது.

மாயை

எல்லாச் சடப்பொருள்களின் ஆற்றல்களும் ஒருங்கிணைந்து திரண்டு ஓராற்றல் மயமாய் நிற்பது எதுவோ அதுவே மாயை என்பதாம். அவ்வாறே ஆற்றல் மயமாக நிற்கும் மாயையிலிருந்தே உலகத்தில் உள்ள சடப்பொருள்கள்

அனைத்தும் தோன்றி அதிலேயே ஒடுங்குகின்றன என்பதும் சைவசித்தாந்தக் கொள்கையாகும்.[71]

மாயை என்பதனை 'மா+யா' எனப் பிரித்து 'மாயா' என்பதில் மா-ஒடுங்குதல், யா-வருதல் எனப் பொருள் கூறுவர்.[72] எனவே மாயையின் காரியங்களாகிய உலகம் முதலான பொருட்கள் தம்முடைய காரணமாகிய மாயையிலேயே ஒடுங்குகின்றன. பின்னர் அதனில் இருந்தே மீண்டும் தோன்றுகின்றன. தனுகரண புவனபோகம் என்னும் நான்குமே உலகம் எனப்படும். தனு-பருவுடம்பு, கரணம்-நுண்ணுடம்பாகிய மனம் முதலிய கருவிகள். இவை 'அந்தக்கரணம்' எனப்படும். புவனம்-உடம்போடு கூடிய உயிர்கள் போக்குவரவு புரியும் இடம். போகம்-அவ்வுயிர்கள் இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சிப் பொருள்கள் ஆகும்.

மாயை ஒன்றாக என்றும் உள்பொருளாகக் கொள்ளப்படும். இதன் இலக்கணத்தை,

"நித்தமாய் அருவாய் ஏக
நிலையதாய் உலகத்திற்கு ஓர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் விமலனுக்கு ஓர்
சத்தியாய்ப் புவன போகம்
தனு கரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யும் அன்றே"[73]

என்னும் சிவஞானசித்தியார் பாடலால் அறியலாம்.

மாயை அறிவற்ற உருவமற்ற பொருளாகும் என்பதனை, 'மாயைதான் அசித்துருவாய் மருவமாட்டாது'[74] என்று சிவப்பிரகாசமும் குறிக்கின்றது.

மாயையின் வகைகள்

மாயை அநாதியானது, அது சுத்தமாயை, அசுத்த மாயை என இருவகைப்படும். மேலும் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்றுவகையாகவும் கூறப்பெறும். மலகன்மங்களோடு விரவாத பகுதி சுத்தமாயை எனவும், அவற்றோடு விரவிய பகுதி 'அசுத்தமாயை' எனவும் கூறப்பெறும். சுத்தமாயையும், அசுத்தமாயையும் ஒன்றிலிருந்து தோன்றாத காரணப் பொருள்கள். பிரகிருதி மாயை அசுத்த மாயையிலிருந்து தோன்றிய காரியப் பொருள். இவ்வகையில் மாயை மூன்றாகவும், காரண நிலையில் மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டாகவும் குறிக்கப்பெறும். மூன்று வகை உயிர்களுக்குப் பயன்படும் வகையில் மூன்று மாயைகளினின்றும் தூய உலகம் (சுத்தப் பிரபஞ்சம்), மாசுலகம் (அசுத்தப் பிரபஞ்சம்), கலப்புலகம் (மிச்சரப் பிரபஞ்சம்) ஆகிய மூவகை உலகங்கள் படைக்கப்படுகின்றன.

மயக்கமின்றி உயிர்க்கு அறிவிப்பது சுத்தமாயை, மயக்கியே அறிவிப்பது அசுத்தமாயை. சிறிது மயக்குவது பிரகிருதி மாயையாகும்.

இறை, உயிர், ஆணவம், கன்மம், போல மாயையும் அநாதி என்பதையும் மாயை காரண நிலையில் இரண்டாகும் என்பதையும்,

"ஏகன் அநேகன் இருள்கருமம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறுஆதி இல்[75]

என்னும் திருவருட்பயன் பாடலால் தெளியலாம்.

உலகம் உண்டாவதற்கு முதற்காரணமாய் இருப்பது

உலகத்திலுள்ள அனைத்துப் பருப்பொருள்களையும் உயிர்களைச் சார்ந்துள்ள அனைத்து உடல்களையும் இறைவன் மாயையிலிருந்து தோற்றுவித்து ஒடுக்குகின்றான். உயிர் அறிவுடையதாக விளங்குகின்றது. உயிர் பிரிந்து போனதும் உடல் அறிவற்ற சடமாகி மண்ணோடு மண்ணாய்ப் போகிறது. இதிலிருந்து உடல்வேறு உயிர்வேறு என்பது புலனாகிறது.

உடல் சார் ஆதலால் அதுவும் மாயையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. பதிபசு போல மும்மலங்களும் உள்பொருள்கள் என்பர். எனவே மும்மலங்களுள் ஒன்றாகிய மாயையும் உள்பொருளே எனப்படும். உள்பொருளாகிய மாயையிலிருந்து உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் தோன்றி ஒடுங்குகின்ற தனு, கரண, புவன போகங்களைப் படைக்கின்றான். எனவே உலகம் முதலாய அனைத்திற்கும் மாயை முதற்காரணமாய் இறைவன் ஆற்றல் துணைக் காரணமாய் இறைவன் நிமித்த காரணமாய் உள்ளதை அறியலாம்.

குடத்திற்கு மண் முதற்காரணமாய்க் குயவன் நிமித்த காரணமாய்த் தண்டசக்கரம் முதலிய கருவிகள் துணைக் காரணங்களாய் இருப்பது போல மாயை உலகிற்கு முதற்காரணமாய், இறைவனது ஆற்றல் துணைக் காரணமாய், இறைவன் நிமித்த காரணமாய் விளங்குகின்றன என்பதனைச் சித்தியார்,

"காரிய காரணங்கள்
முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின் மண் திரிகை பண்ணும்
அவன் முதல் துணை நிமித்தம்
தேரின் மண் மாயை ஆகத்
திரிகைதன் சத்தி ஆக
ஆரியன் குலாலன் ஆய்நின்று
ஆக்குவன் அகிலம் எல்லாம்"[76]

என்னும் பாடலால் விளக்குகின்றது.

உலகத் தோற்றத்திற்கு மாயை முதற்காரணம் என்பதை இன்னொரு உவமையாலும் சித்தியாரால் விளக்கப்படுகின்றது. வித்தினிடத்து கிளை, இலை, தண்டு, மலர் முதலியன சூக்கும வடிவாக அடங்கிப் பின் தூல வடிவாக வெளிப்படுகின்றன. இவ்வாறு காண்டல் அளவையாலும் உரை அளவையாலும் இவ்வுண்மை வெளிப்படுதலால் மாயையிலிருந்து உலகம் தோன்றியது என்னும் கருத்து இதன்வழி உண்மையாகிறது. ஆகவே உலகத்திற்கு முதற்காரணம்

மாயையே அன்றி வேறில்லை என்பது தெளிவாகின்றது. வித்தினுள் அதன் விளைபொருள்கள் சூக்குமமாய் அடங்கி இருந்து பின்பு தூலமாய்த் தோன்றுவது போல மாயையினுள் இந்தப் பரந்து விரிந்த உலகம் சூக்குமமாய் அடங்கியிருந்து பின்பு தூலமாய் வெளிப்படுகின்றது. விளைபொருட்களை அடக்கிய வித்து உலகத்தைத் தன்னுள் அடக்கியுள்ள மாயைக்கு உவமையாகும். இவ்வுண்மையை,

"தோற்றமும் நிலையும் ஈறும்
மாயையின் தொழில் அன்றே
சாற்றிடும் உலகம் வித்துச்
சாகாதி அனைத்துமாக
ஏற்றதேல் ஈண்டு நிற்கும்
இல்லதேல் இயைவதின்றாம்"[77]

என்னும் பாடல்களால் காட்டுகிறது.

மாயை இருள் நீக்கும் கருவி

உயிரின் அறிவை மறைப்பது ஆணவ மலம் என்ற இருள். இந்த இருளை நீக்கி உயிரின் அறிவை விளக்கும் கருவியாக மாயை பயன்படுகிறது. இத்தகைய கருவியை இறைவன் உயிருடன் சேர்க்கின்றான். இதனைச் சிவஞானபோதம் உவமைகளின் வழி விளக்குகின்றன.

நெருப்பைத் தன்னிடத்து மறைத்து வைத்துள்ள விறகு போல் உயிரை ஆணவம் மறைத்துள்ளது. ஆனால் மாயை உயிரின் அறிவை மறைக்கும் இருள் அன்று. அறிவை விளக்கி, அறியாமை என்னும் இருளை அகற்ற வந்த ஒளியே ஆகும் என்பதனை மெய்கண்டார்,

"மாயா தனுவிளக்கா மற்றுஉள்ளம் காணாதேல்
ஆயாதாம் ஒன்றை அதுஅதுவாய் வீயாத
வன்னிதனைத் தன்னுள் மறைத்துஒன்றாம் காட்டம்போல்
தன்னைமலம் அன்று அணைத்தல் தான்"[78]

என்று குறிப்பிடுவதன்வழி அறியலாம். இங்கு ஆணவம் அறிவை மறைத்து இருள் போன்றதாய் நிற்கும் என்றும் மாயை அவ்விருளை நீக்கி அறிவை விளக்கும் ஒளி போன்றதாய் நிற்கும் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் இவரே உயிரை விளக்கச் செய்யும் கருவி மாயை என்பதை 'தர்ப்பணம் போல்'[79] என்ற உவமை வழி விளக்குகிறார். தர்ப்பணம் என்பதற்குக் கண்ணாடி என்பது பொருளாகும். இவ்வுவமை வழி கண்ணுக்குத் துணையாய் நின்று பொருளை விளக்கும் கண்ணாடி போலப் பெத்த நிலையில் உயிர்க்கு மாயை ஆணவமலத்தினால் உண்டான அறியாமையைப் போக்கி அறிவைக் கொடுக்கும் தன்மையுடையது என்பது புலனாகிறது.

மாயைக்குத் தீபமும் ஒப்புமையாகச் சொல்லப்படுகிறது. சிவஞானபோதம்,

".................. தீபமே போல"[80]

என்று கூறுவதன் வழி, கண்ணுக்கு விளக்குக் கருவியாதல் போல, மாயை உயிருக்குத் தூல உடம்பையும் சூக்கும உடம்பையும் தந்து விளக்கம் தரும் என்ற கருத்துப் புலனாகின்றது.

திருவுந்தியாரும் மாயையுடன் கூடிவாழும் உயிர் நிலையைப் 'பகல்'[81] என்று கூறுகின்றது. இக்கருத்தையே திருவருட்பயனும், 'ஆணவம், இருள், அவ்விருளைப் போக்கும் ஒளிப்பொருளே மாயை ஆகும்'[82] என்கிறது.

ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும் உயிர்க்கு இறைவன் மாயையின் காரியமாகிய தனு, கரண, புவன, போகம் கொடுத்து அவற்றின் வழிப் பிறவிகளையும் நல்வினை தீவினைகளையும் அனுபவிக்கச் செய்து, உயிரை மலங்களில் இருந்து நீங்க வழி வகுக்கின்றான். இவ்வாறு ஆணவத்திலிருந்து உயிர் விடுபட இறைவன் அருள் செய்கின்ற நிலையை,

"கட்புலனாற் காணார்தம் கைக்கொடுத்த கோலே போல்"[83]

என்று போற்றிப்பஃறொடை உவமையுடன் விளக்குகின்றது. அதாவது குருடன் கையில் கொடுக்கப்பட்ட கோலால் அவன் வழி நடத்தப் படுவது போல ஆணவ

மறைப்பால் வழிதவறிச் செல்லும் உயிரை மாயை [illegible] வழிநடத்தும் என்பதாம்.

மாயையினால் ஆகிய தனு, கரண, புவனம், போகங்கள் உயிர்களின் புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு கிடைக்கின்றன. அவை விடியுமளவும் இருளை நீக்குவதற்கு விளக்கு ஒரு கருவியாதல் போல உயிர் இறையாகிய பேரொளியைப் பெறும் அளவும் ஆணவ இருளை நீக்குவதற்குக் கருவியாகின்றன என்பதைத் திருவருட்பயன்,

"விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து"[84]

என்னும் பாடல் தெளிவிக்கின்றது. எனவே மாயாமலத்திற்கு இருளை நீக்கக்கூடிய விளக்கு உவமை.

எனவே இவ்வுவமைகளின் வழியாக ஆணவமலத்தில் அழுந்தியுள்ள உயிர்களுக்கு ஒருவாறு அறிவு விளக்கத்தைத் தந்து உதவுவது மாயையாகும் என்றறியலாம்.

மாயை சடப்பொருள் ஆதலினால் இறைவனே உயிர்களுக்குப் பயன்படும் பொருட்டு அதனைக் காரியப்படுத்துகின்றான். இதனைச் சிவஞானசித்தியார்,

"மெழுகினை அறுவைசாணி
உவர் செறிவித்து அழுக்கை
முழுவதும் கழிப்பான் மாயை
கொடுமலம் ஒழிப்பான் முன்னோன்"[85]

என்னும் பாடலடிகளால் விளக்குகிறது. அழுக்குடைய மெல்லிய ஆடையின் அழுக்கைச் சாணி, உவர்மண் முதலிய பிறிதோர் அழுக்கைக் கொண்டு வண்ணான் முழுமையாக நீக்குகின்றான். அதுபோலவே மாயாமலம் ஆகிய மருந்தைக் கொண்டு ஏனைய ஆணவ கன்ம மலங்கள் ஆகிய நோயை இறைவன் நீப்பான். ஆடை உயிர்க்கும் ஆடையின் மீது படிந்த அழுக்கு ஆணவ மலத்திற்கும் அழுக்கை நீக்கப் பயன்படும் சாணி, உவர்மண் போன்றவை ஆணவமலத்தை நீக்கப் பயன்படும் மாயைக்கும் உவமைகளாகியுள்ளன.

உலகம் தோன்றி ஒடுங்கும்

தோன்றி நின்று ஒடுங்கும் உலகம் அசத்துப் பொருளாகும். சிவஞானபோதம் உலகம் தோன்றி ஒடுங்குவதற்கு நீரின் மேல் எழுத்து, கனவு, பேய்த்தேர் ஆகியவற்றை உவமைகளாகக் கூறி விளக்குகின்றது. நீரில் எழுத்துத் தோன்றியபோதே அழியலாம். கனவு காண்கின்றவன் நனவு நிலைக்குத் திரும்பினால் அக்கனவு முற்றுப் பெறாமலேயே இடையில் முடிந்துபோகும். அதுபோல இவ்வுலகும் நிலைத்திருப்பது போலத் தோன்றி இடையில் மறைந்து போகும். பேய்த் தேரானது முதுவேனில் காலத்து நண்பகலின் கடுமை பற்றித் தோன்றிக் கதிரவனின் கதிர்கள் மேகத்தில் மறைந்த வழித் தானும் மேகமாகிய காரணம் காட்டி மறைந்து போகும். அதுபோல உலகமும் நோய் போல ஏதாவது ஒரு காரணத்தால் அழியும். இவ்வுண்மையை,

"நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின் அவை இன்றாமா றொப்பு"[56]

என்று சிவஞானபோதம் கூறுகின்றது.

உலகம் உடல் என்ற இரண்டும் தோன்றிப் பிறிதோர் நிலைபெற்றிருந்து பின்னர் அவை தோன்றிய இடத்திலேயே சென்று ஒடுங்கிவிடும். உலகம்,மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐவகைப் பகுப்பினை உடையது. உடலும் ஆண், பெண், அலி என்னும் ஐவகைப் பகுப்பினை உடையது. இவை இரண்டும் ஐவகைப் பகுப்பினைஉடைமையால் உடலைப் போலவே உலகமும் தோன்றி நின்று ஒடுங்கும்.[57]

முளைகளானவை கார்காலத்து விதையினின்று முளைத்து வரும். இவ்வாறு ஒருசேரக்கார்காலத்தில் முளைத்து வேனில்காலத்துத் தகுதியால் ஒருசேர அழியும். இவ்வாறு பயிர்கள் முளைப்பதற்கும் அழிவதற்குமென ஒரு காலம் இருக்கின்றது. அதுபோல உலகமானது தோற்றம், திதி, அழிவு என்று அதற்குரிய காலம் வரும்பொழுது தோன்றி நிலைபெற்று அழியும் என்பதனைச் சித்தியார்,

"...... பயில்வித்து எல்லாம்
காரியம் அதனில் காட்டும்
அங்குரம் கழியும் வேனில்
சீருமைத்து உலக காலம்
சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்"[88]

என்ற அடிகளில் குறிப்பிட்டுள்ளது.

உலகத்தின் தோற்றம், நிலைபேறு, அழிவுக்கு அதற்குரிய காலத்தே வித்து முளைத்துப் பயன் தந்து பின் அழியும் நிலை உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

தத்துவங்கள் தோன்றும் நிலை

துன்பங்கள் ஆகிய பலன்களை, உயிர்களை அனுபவிக்கச் செய்து ஆகாமியம், பிராரத்தம் என்னும் இருவினைகளை நீக்கவும் சஞ்சித வினைகளை மேலைக்கு வித்து ஆகாதவாறு அழிக்கவும் வினைகளுக்குக் காரணமாய் இருக்கும் ஆணவ மலத்தைப் போக்கவும் தத்துவங்கள் உயிரோடு பொருந்துகின்றன. தத்துவங்கள் எல்லாம் உயிர்களோடு பொருந்துவன என்று அறிந்து அவற்றை நீக்கித் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சிவனை அறிபவனே தத்துவஞானியாவான்.

உயிர் உய்தி பெறுவதற்கு வேண்டும் கருவிகளே தத்துவம் எனப்படும். மாயையினின்றும் முதலில் தத்துவங்களே தோன்றும். பின்பு தத்துவங்களினின்றும் உலகம் தோன்றும். தத்துவங்களினின்றும் தோன்றுவனவற்றிற்குத் தாத்துவிகம் என்பது பெயர். இவை அறுபது ஆகும். தத்துவங்களின்றே உலகம் தோன்றுவதால் உலகிற்கு முதற்காரணமாய் இருப்பவை தத்துவங்களே. தத்துவங்கள் மாயையின் காரியங்கள் ஆதலின் உலகிற்கு முடிவான முதற்காரணம் மாயை ஆகும்.

தத்துவங்களைப் பற்றிச் சிவப்பிரகாசம்,

"ஐந்துசுத்தம் ஏழ்சுத்தா சுத்தம்
எண்மூன்றும் அசுத்தம் எனும்இவை முப்பத்தாறாம்"[89]

என்றும், உண்மை விளக்கம் ஆறாறு தத்துவம்[90] என்றும் கூறுகின்றன. எனவே தத்துவங்களின் எண்ணிக்கை முப்பத்தாறாகும் என்பது தெளிவாகின்றது.

முப்பத்தாறு தத்துவங்களை முழுதுணர்ந்தோர் பிறவிப்பிணி அறுப்பர் என்பர். இதனை,

"நால் உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல்நான்கும் – மேலைச்
சிவமாம் பரிசினையும் தேர்ந்துணர்ந்தோர் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பர் பார்"[91]

என்னும் திருக்களிற்றுப்படியார் பாடல் உணர்த்துகின்றது. மாயையின் காரியங்களாகிய தத்துவங்களின் வகைகள் அவற்றின் காரியங்கள் பற்றி உண்மை விளக்கம் விரிவாகக் கூறுவதைக் காணலாம்.

இத்தத்துவங்களைச் சிவதத்துவம், வித்யா தத்துவம், ஆன்ம தத்துவம் என மூன்று வகையாகப் பாகுபடுத்துவர். இதனைப் பற்றி விளக்குவதற்கு சாத்திர நூல்கள் தக்க உவமைகளை ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளன. இவை குறித்து கீழே எடுத்துரைக்கப்படுகின்றது.

சுத்த தத்துவம்

சுத்தமாயை என்பது இறைவன் எடுக்கும் திருமேனிகளுக்கும் உயிர்க்கு ஞானம் தரும் வேதாகமங்கள் தோன்றுவதற்கும் இடமாக இருப்பதாலும், மலகன்மக் கலப்பின்மையாலும், விருப்பு வெறுப்பு அற்றதாய துன்பமும் இல்லாததாலும் அப்பெயரைப் பெறுகிறது. சுத்தமாயையிலிருந்து சுத்த தத்துவங்கள் தோன்றும். அவை சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்று ஐந்தாகிச் சிவதத்துவம் எனப் பெயர் பெறும்.

சிவதத்துவம்

உலகத்தைத் தொழிற்படுத்தக் கருதும்போது இறைவனுக்கு இச்சா, ஞான, கிரியைகளில் இச்சை எஞ்ஞான்றும் ஒரே நிலையில் இருக்கும். ஞானமும் கிரியையும் தனித்தும் மிகுந்தும் குறைந்தும் சமமாகவும் இருக்கும். முதலில் ஞான

சத்தியொன்றினால் சுத்த மாயை பொருளில் நோக்கிச் சிவன் என்ற பெயர் பெற்றிருக்கும். நாதம் என்ற பெயரும் உண்டு.

சத்தி தத்துவம்

ஞானசத்தியால் சுத்தமாயைப் பொருளாக நோக்கிய இறைவன் கிரியா சத்தி ஒன்றால் சுத்த மாயையைக் காரியப் படுத்திப் பொதுவகையில் செயல்படும்போது சத்தி என்று பெயர் பெறும். விந்து என்ற பெயரும் உண்டு.

சாதாக்கியம்

ஞானமும் கிரியையும் சமமாக இருப்பது சாதாக்கியம் அல்லது சதாசிவம் எனப்படும்.

ஈசுரம்

ஞானம் குறைந்து கிரியை மிக்கு இருக்கும். மகேசுரம் என்றும் வழங்கும்.

சுத்தவித்தை

கிரியை குறைந்து ஞானம் மிக்கு இருக்கும்.

நால்வகை வாக்குகள்

சுத்தமாயையின் காரியமாக வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை எனப்படும் நால்வகை வாக்குகள் தோன்றும். அவற்றுள் வைகரி வாக்கு என்பது, தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவது, நினைத்த பொருளைச் சொல்லும் சொல்லாய் இருப்பது. சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் பகுத்துணர்வு உண்டாவதற்கு ஏதுவாய் இருப்பது. உடம்பில் எழும் உதான வாயுவினால் தள்ளப்பட்டு வாயின் வழியாய் வெளிப்படும் ஒலியினைக் குறிக்கும்.

மத்திமை வாக்கு என்பது தன் உள்ளே உணரும் ஓசையாய், உள்ளே எழுத்துக்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாய் உள்ள ஒலியே ஆகும்.

பைசந்தி வாக்கு என்பது ஐந்து நிறங்களையும் சூக்கும வடிவாக ஒடுக்கி நிற்கும் மயில் முட்டையினுள் இருக்கும் நீர் போலப் பலவகைப்பட்ட எழுத்துக்கள்

வேறு வேறாக விளங்கித் தோன்றும் முறைமையினை அக்கரங்களின் சூக்கும ரூபமாய்க் கொண்டு சிந்தையில் அமர்ந்து நிற்பது ஆகும். இதனைச் சித்தியார்,

"வேற்றுமைப்பட் டெண்ணும்
வெவ்வேறு வியாகம் ஆகித்
தோற்றுதல் அவை ஒடுக்கிச்
சொயம் பிரகாசம் ஆகிச்
சாற்றிய மயிலின் அண்டம்
தரித்திடும் சலமே போன்று அங்கு
ஆற்றலோடு உருவது ஆகிப்
பைசந்தி அமர்ந்து நிற்கும்"[92]

என்னும் பாடலின்வழி உணர்ந்து அறியலாம். எனவே மயிலின் முட்டைக்குள் இருக்கும் நீரிலே மயிலின் ஐந்து நிறங்களும் கலந்து தோன்றும். அதுபோல சித்தத்தில் ஓர் உணர்வு மட்டுமே தோன்றி எழுத்துக்களை நிருவிகற்பமாய் உணரும் ஒலியே பைசந்தியாகும் என்பது புலனாகிறது. இதே உவமையை 'மயிலண்ட சலம் போல்'[93] என்று சிவப்பிரகாசம் குறிக்கின்றது.

சூக்குமம் முதலான நால்வகை வாக்குகள் ஆணவமலத்தினை நீக்கி அறிவு விளக்கம் தரும் என்பதை,

"இருள்நீக்கும் கதிரே போல்"[94]

என்ற உவமை விளக்குகின்றது.

ஆன்ம தத்துவம்

ஐம்பூதங்கள் ஐந்து, ஐம்பொறி, ஐம்புலன்கள், அந்தக் கரணங்கள் நான்கு, தொழிற்படும் கருவி ஐந்து என இவை இருபத்து நான்கும் ஆன்ம தத்துவம் எனப்படும். ஐம்பூதங்கள் என்பன நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பதாகும். இவற்றிற்குரிய அதி தெய்வங்கள் அயன், மாயன், உருத்திரன், ஈசன், சதாசிவன். இவைகளுக்குரிய தொழில்கள் ஐந்தாகும்.

இறைவன் அயனைக் கொண்டு உயிர்களுக்கு மாயையிலிருந்து உடல், கருவி, உலகு ஆகிய நுகர்பொருள்களை ஆக்கிக் கொடுத்தலே படைப்பாகும். அவற்றை நிலைபெறச் செய்து துய்க்க வைப்பதே காத்தலாகும். அவற்றை மீளவும் மாயையில் ஒடுக்குவதே அழிவாகும். இச்செயல் மூன்றும் மாயையில் நிகழ்வனவாகும். உயிர்களுக்கு உடல் வாயிலாகப் பிறப்பு இறப்பினை வழங்கி அவற்றிற்குரிய இன்ப துன்பங்களை ஊட்டுவிப்பதே மறைப்பாகும். உயிர்களுக்குப் பாசத்தை நீக்கி வீடுபேற்றை அருளுவதே அருளாகும். இவ்வைந்தொழில்களையும் முத்தொழில்களாகவும் கூறுவர்.

ஐம்புலன்கள் என்பவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவாம். அறிவுப்பொறிகள் என்ற ஞானேந்திரியங்கள் செவி, தோல், கண், நா, மூக்கு என்பன. தொழிற்பொறிகள் என்ற கன்மேந்திரியங்கள் வாய், கால், கை, எருவாய், கருவாய் என்பன. அகக்கருவிகள் என்ற அந்தக் கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

வித்தியா தத்துவம்

ஆன்ம தத்துவங்களோடு உயிர் இணைந்து உலக நுகர்ச்சியில் மயங்கிக் கிடக்குமிடத்து அதற்கு அறிவு விளக்கம் தந்து அந்நுகர்ச்சியால் நோக்குடையனாகச் செய்யும் கருவிகளே வித்தியா தத்துவங்கள் எனப்படும். அவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற ஏழுமாகும். இவை அசுத்தமாயையிலிருந்து தோன்றும். இவை சுத்தாசுத்த தத்துவம் எனப்படும். அசுத்தமாயையிலிருந்து முதலில் காலதத்துவமும் கலை தத்துவமும் கலையில் வித்தை தத்துவமும் தோன்றும். வித்தையிலிருந்து அராக தத்துவம் தோன்றும். இவ்வைந்தினோடு கூடிய உயிர் புருட தத்துவம் எனப்படும். கலை தத்துவத்திலிருந்து மூலப்பிரகிருதியும் அதிலிருந்து குண தத்துவமும் தோன்றும்.

நியதி தத்துவத்தின் காரியப்பாடு

காலம், நியதி, அராகம் என்னும் வித்தியா தத்துவங்கள் காரியப்படும் முறையைக் குறிப்பிடும்பொழுது நியதி தத்துவத்தின் காரியப்பாட்டை உவமையுடன் விளக்குகிறது சிவப்பிரகாசம்.

"போரிய அராகம் தன்கன்மத்துக்கு ஈடாய்

பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும் நியதி

தேசறிதும் அரசர்தரும் ஆணை செய்தி

செய்து வரை தப்பிக்கும் செய்ஞ்ஞ போல

நேசமுறும் தன்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்

நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே

ஓசைதரும் காலம் எல்லை பலம் புதுமை

உறுவிக்கும் இறைசக்தி உடனாய் நின்றே"[95]

என்று கூறுகின்றது. அதாவது உயிர்க்கு அராக தத்துவம் கன்மங்களுக்கு ஈடாகப் பெற்றதைச் சிறிதாக்கிப் பெறாததில் ஆசையை மிகவும் உண்டாக்கும் என்றும் நியதிகள் மற்றதை நிச்சயித்து நிறுத்தும் என்றும் காலதத்துவம் இறந்த கால எல்லையையும் நிகழ்காலத்தின் பயனையும் எதிர்காலத்தின் புதுமையையும் உணர்த்தும் என்றும் காலம், அராகம், நியதி ஆகியவை காரியப்படும் முறை கூறப்படுகிறது. இவ்வாறு கூறும்பொழுது அரசாட்சி செய்யும் அரசனின் ஆணைப்படி குடிமக்களை எல்லை விட்டு நீங்காதபடி அந்த ஆணையிலே நிறுத்தி வழி நடத்தும் அமைச்சன் போல் நியதி தத்துவம் உயிர்கள் செய்த கன்மத்தின் வழியன்றிப் போகாதபடி கன்மத்தை நிச்சயித்து நிறுத்தும் என உவமையால் விளக்குகிறது. தத்துவங்கள் உயிர் பிறவியிலிருந்து ஈடேறுதற்கு இறைவனால் தரப்பட்ட கருவிகளாகும். இக்கருவிகள் வழி பல்வேறு பிறப்புக்களுக்கு உள்ளாகிப் பின் உயிர் பக்குவத்தை அடையும். உயிர் பல்வேறு பிறப்பெடுப்பதை உவமைகள் வழி சிவப்பிரகாசம் காட்டுகிறது. தத்துவங்கள் வழியே உயிரானது மயங்கிப் பெரும் துன்பத்தை அனுபவிக்கும். உடல் நிலைகுலையும்பொழுது கோடுகள் பொருந்தின பாம்பு முன்னையத் தோலை விடுத்துப் போதல் போலவும் முட்டையில் தோன்றிய உயிரினங்கள் அம்முட்டையை விட்டுப் போதல் போலவும், நனவில் கண்டவற்றைக் கனவில் மறந்து அறிவு வேறுபட்டால் போலவும் கலை முதலிய தத்துவங்களோடு கூடி வினை நுகர்வதற்குரிய உடம்புகளைப் பெற்று மேலுலகிலும் கீழ் உலகிலும் நுகரத்தக்க இன்ப துன்பங்களை நுகர்ந்து இறையருளால் இவ்வுலகில் வந்து பிறக்கும்.[96]

தத்துவங்கள் அறிவற்றன

முப்பத்தாறு தத்துவங்களும் தம்மைத்தாம் அறியமாட்டா. அதனால் இவை அறிவற்றன. இதனை உண்மை விளக்கம்,

"தத்துவங்கள் ஆறாறும் தம்மைத்தாம் என்றறியா
எத்தன்மை என்னில் இயம்பக்கேள் – சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாவே தம்மைத்தாம்
கூறில் அவை யவைபோல் கொள்"[97]

என்ற பாடல் விளக்குகின்றது. அறுசுவைகளாவன யான் இனிப்பு, யான் புளிப்பு என்பது போலத் தம்மைத் தாம் உணர்வதில்லை. அதுபோலத் தத்துவங்களும் யான் இன்ன தத்துவம் என்று தம்மைத் தாம் உணர்வதில்லை. எனவே தம்மை உணராத தத்துவங்கள் அறிவற்றவை. அறிவுடைய உயிரின் பக்குவத்திற்கு அவை துணைநிற்பன என்பதாம்.

முடிவுரை

பாசம் உயிரின் அறிவைத் தடை செய்வதால் தளை, தடை, மலம் என வேறு பெயர்களாலும் சுட்டப்பெறும். பாசம் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும்.

மும்மலங்களும் என்றும் உள்ளவை. அநாதியானவை என்பதற்கு நெல்லிடத்துள்ள உமியையும், செம்பிடத்துள்ள களிம்பையும் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூல்கள் ஒப்புமையாகச் சொல்லியுள்ளன.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் அநாதியானவை என்ற கருத்தை விளக்கக் கடல், நீர், உப்பு ஆகியவை உவமைகளாயுள்ளன. நீருடத்துள்ள உப்பு மும்மலங்களும் அநாதியானவை என்பதற்கு உவமையாகும். இவற்றைச் சிவஞானபோதம், சித்தியார், போற்றிப்பஃறொடை ஆகியவை குறிப்பிட்டுள்ளன.

மலங்கள் நீக்கப்படுவது இறைவனால் என்பதற்குத் தாமரை மலரை அலரவும் கூம்பவும் செய்கின்ற கதிரவனைச் சிவஞானபோதம் ஒப்புமையாகக் கூறுகிறது.

ஆணவமலம் உயிரை அநாதியே பற்றி நிற்பதற்கும் அதனை மறைப்பதற்கும் செம்பிலுறு களிம்பு உவமையாகியுள்ளது.

உயிருக்கும், அதற்கு அறியாமையைத் தந்து உயிரை மறைத்து நிற்கும் ஆணவத்திற்கும் விறகும் விறகில் உள்ளநெருப்பும் பாம்பும், பாம்பிடத்துள்ள மணியும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. பொருள்களைக் காணவொட்டாது இருள் மறைப்பது போல உயிரை மறைப்பதால் ஆணவம் இருளென்று கூறப்பட்டுள்ளது.

ஆணவத்துடன் கூடிய உயிர்க்கு இருளைப் பொருந்தி நிற்கும் கண்ணைச் சிவப்பிரகாசமும் ஆந்தையின் கண்ணைத் திருவருட்பயனும், ஒளி மழுங்கிய கண்ணைச் சிவஞானபோதமும் ஒப்புமையாகச் சொல்லியுள்ளன.

ஆணவத்தின் ஆவாரக சத்திக்கு வெள்ளத்துள் இருந்தும் நாவறண்டிருத்தலும் கதிரவன் ஒளியிருந்தும் இருள் நீங்கவில்லை என நினைத்தலும் அதோ நியாமிகா சத்திக்குப் பாற்கடல் மீன்களின் செயலும் பாற்கலனின் மேலுள்ள பூனை கரப்பானை நாடுவதும் உவமைகளாகத் திருவருட்பயன் காட்டியுள்ளது.

ஆணவமலம் உயிர்க்குச் செயற்கையானது என்பதற்குக் கண்ணை மறைத்திருக்கும் படலம் சித்தியாரில் ஒப்புமையாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஆணவமும் மாயையும் ஒளியும் இருளும் போல வேறானவை என்று சித்தியார் குறிப்பிட்டுள்ளது.

முத்தி நிலையிலும் ஆணவம் அழியாது உயிருள் அடங்கி நிற்பதற்கு ஒளிமுன் இருள் அழியாது அதனுள் அடங்கி நிற்கின்ற தன்மையைச் சிவப்பிரகாசம் ஒப்புமையாகச் சுட்டியுள்ளது.

உயிருக்கு ஒரே தன்மையான அறிவே இயற்கை. அது அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் செயற்கை என்பதற்குத் தண்மையை இயற்கையாகக் கொண்டுள்ள நீரிடத்து வெம்மையும் மலரில் மணமும் ஆகிய செயற்கை முறையே தீயும் மலரும் சேர்வதால் வருவதைச் சித்தியார் ஒப்புமையாகக் கூறியுள்ளது.

வினையும் பயனும் தொடர்ந்து வரும் என்பதற்கு வித்தையும் மரத்தையும் உவமைகளாகச் சித்தியார் காட்டுகிறது.

உயிர்க்கு வினைப்பயனை இறைவன் கூட்டுவிக்கின்றான் என்பதற்குச் சிவஞானபோதம் காந்தத்தின் முன் வைக்கும் இரும்பை உவமையாகக் கூறுகின்றது.

வினை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகைப்படும். இவை மாறி மாறி வருவதற்கு வித்து மாறி மாறி வந்து பயன் தருகின்ற தன்மை உவமையாகச் சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் கூறப்பட்டுள்ளது.

உயிர்க்கு வினைப்பயனை இறைவன் ஊட்டும் செயல் நோயாளிக்கு மருந்தினைக் கொடுப்பது போலும் என்றும் கொடியவனை அரசன் தண்டிப்பது போலும் என்றும் சித்தியார் குறிப்பிடுகின்றது.

உலகம் உண்டாவதற்கு முதற்காரணமாய் இருப்பது மாயை : இறைவன் ஆற்றல் துணைக் காரணம் : இறைவன் நிமித்த காரணன் என்பதைக் குயவன், மண், தண்டு சக்கரம் முதலிய உவமைகளால் சித்தியார் விளக்குகிறது.

மாயையிலிருந்து உலகம் தோன்றுவதற்கு வித்தினிடத்து கிளை, இலை, தண்டு, மலர் முதலியவை தோன்றுதல் ஒப்புமையாகச் சித்தியாரால் கூறப்பட்டுள்ளது.

மாயை இருள் நீக்கும் கருவியாக உள்ளது. இதற்குச் சிவஞானபோதம் கண்ணாடி, தீபம் முதலான உவமைகளைச் சுட்டுகின்றது. திருவருட்பயன் விளக்கினை உவமையாகக் கூறியுள்ளது.

உலகம் தோன்றி ஒடுங்குவதற்கு நீரில் எழுத்து, கனவு, பேய்த்தேர் போன்றவற்றைச் சிவஞானபோதம் உவமைகளாகக் கூறியுள்ளது.

மாயையிலிருந்து தத்துவங்கள் தோன்றுகின்றன. இதனைச் சித்தியார், சிவப்பிரகாசம்,உண்மை விளக்கம் முதலான சாத்திர நூல்கள் விளக்குகின்றன.

வைசந்தி வாக்கின் இயல்புக்கு மயில் முட்டையிலுள்ள நீரை சித்தியாரும் சிவப்பிரகாசமும் ஒப்புமையாகக் கூறியுள்ளன.

அசித்துப் பொருள்களான தத்துவங்கள் தம்மைத் தாம் உணராதிருப்பதற்குச் சுவைகள் தம்மை உணராத்தன்மை ஒப்புமையாக உண்மை விளக்கத்தால் கூறப்பட்டுள்ளது.

குறிப்புக்கள்

1. திருஞானசம்பந்தர், தேவாரம், 1:12:3
2. கச்சியப்ப முனிவர், கந்தபுராணம், பா.எ.30
3. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.82.
4. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.10
5. மாணிக்கவாசகர், திருவாசகம் (நீத்தல் விண்ணப்பம்), பா.எ.29
6. திருமூலர், திருமந்திரம், பா.எ.160
7. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.32
8. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.2, அதி.உ. எ.கா.வெ.3
9. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.25
10. மேலவர்., போற்றிப்பஃறொடை, பா.வ.14
11. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.7, அதி.3 எ.கா.வெ.3
12. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.251
13. உமாபதி சிவாச்சாரியார், போற்றிப்பஃறொடை, பா.வ.14
14. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.315
15. மேலவர்., மேலது., பா.எ.176
16. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.32, பா.வ.2
17. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.170
18. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.20
19. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.1
20. மேலவர்., மேலது., நூ.எ.4 அதி.2, எ.கா.வெ.1

21. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.170, பா.வ.6
22. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.20, பா.வ.3
23. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.4, அதி.2 எ.கா.வெ.1 [பக்-113-114]
24. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பக்..171, 172
25. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.20
26. மனவாசகங்கடந்தார், உண்மை விளக்கம், பா.எ.22
27. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.170
28. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.20
29. மேலவர்., போற்றிப் பஃறொடை, பா.வ.16–19
30. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், பா.எ.22
31. மேலவர்., சிவப்பிரகாசம், பா.எ.34
32. மெய்கண்டார், சிவஞானபோதம், ப.27
33. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.20
34. மேலவர்., திருவருட்பயன், பா.எ.23
35. மேலவர்., மேலது., பா.எ.22
36. மேலவர்., மேலது., பா.எ.19
37. திருவள்ளுவர், திருக்குறள், கு.எ.481
38. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், பா.எ.24
39. மேலவர்., கொடிக்கவி, பா.எ.1
40. மேலவர்., உண்மைநெறி விளக்கம், பா.எ.2
41. மேலவர்., வினாவெண்பா, பா.எ.1
42. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.80
43. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், பா.எ.38
44. திருவள்ளுவர், திருக்குறள், கு.எ.5

15. மேலவர்., மேலது., கு.எ.352
16. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், பா.எ.34
17. மேலவர்., மேலது., பா.எ.39
18. திருவள்ளுவர், திருக்குறள், கு.எ.351
19. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.80
50. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.88
51. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.170
52. மேலவர்., மேலது., பா.எ.174
53. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.88
54. மனவாசகங்கடந்தார், உண்மை விளக்கம், பா.எ.50
55. உமாபதி சிவாச்சாரியார், உண்மைநெறி விளக்கம், ப.8
56. வாகீசமுனிவர், ஞானாமிர்தம், பா.எ.26
57. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.4 அதி.2
58. மேலவர்., மேலது., நூ.எ.2, அதி.2. எ.கா.வெ.4
59. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.95
60. திருவள்ளுவர், திருக்குறள், கு.எ.373
61. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.100
62. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம் (சுந்தரமூர்த்தி உரை), ப.40
63. சுந்தரர், தேவாரம், 7:35:4
64. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.29
65. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.232
66. அருணந்திசிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.94
67. உமாபதி சிவாச்சாரியார், போற்றிப் பஃறொடை, பா.வ.98–106

68. மேலவர்., சிவப்பிரகாசம், பா.எ.89

69. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், [illegible] து., பா.எ.102

70. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.29

71. க.வைத்தியநாதன், சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள், ப.10

72. மு.அருணை வடிவேல் முதலியார், முப்பொருள் இயல்பு, ப.41

73. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.143

74. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.23

75. மேலவர்., திருவருட்பயன், பா.எ.52

76. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.38

77. மேலவர்., மேலது., பா.எ.34

78. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.3, அதி.1, எ.கா.வெ.1

79. மேலவர்., மேலது., நூ.எ.4, அதி.2, எ.கா.வெ.1

80. மேலவர்., மேலது., நூ.எ.3, அதி.7, எ.கா.வெ.1

81. திருவியலூர், உய்யவந்த தேவநாயனார், திருவுந்தியார், ப.16

82. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், பா.எ.20

83. மேலவர்., போற்றிப்பஃறொடை கண்ணி.21

84. மேலவர்., திருவருட்பயன், பா.எ.30

85. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.142

86. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.எ.6, அதி.1. எ.கா.வெ.1

87. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.31

88. மேலவர்., மேலது., பா.எ.29

89. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.46

90. திருவதிகை மனவாசகங்கடந்தார், உண்மை விளக்கம், பா.எ.1

91. திருக்கடவூர் உய்யவந்ததேவர், திருக்களிற்றுப்படியார், பா.எ.37

92. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார் சுபக்கம், பா.எ.42

93. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், பா.எ.38

94. மேலது., போற்றிப் பஃறொடை, கண்ணி, 34

95. மேலது., சிவப்பிரகாசம், பா.எ.40

96. மெய்கண்டார், சிவஞானபோதம், நூ.பா. 2, அதி. 3, உ.கா. வெ.1, 2

97. மனவாசகங்கடந்தார், உண்மைவிளக்கம், பா.எ.24